# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13வள்ளுவர் ஆண்டு2029சித்திரை20 (3-05-1998) ஞாயிற்றுக்கிழமை UTHAYAN- Ahlvely National Tamil Dailyகதிர்:133



பொது சன நூலகம்
-3 MAY 1998
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்


# கொடிகாமத்தில் கிரனெட் வெடிப்பு!

## ஒருவர் பலி; 10 பேர் காயம்

தென்மராட்சி, மே 3

கொடிகாமம் சந்தைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற கிரனேட் வெடிப்பில் ஒருவர் கொல்லப்பட்டார். பத்துப் பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலும், யாழ். போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்றுக் காலை 10.30மணி அளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

கொடிகாமம் பருத்தித் துறை வீதியில் தேங்காய்க் கடை ஒன்றுக்கு முன்னால் இந்த கிரனேட் வெடித்தது.

சந்தை மற்றும் தேவைகளின் பொருட்டு வந்தவர்களே காயமடைந்தவர்கள் ஆவர்.

இச் சம்பவத்துக்கு யார் பொறுப்பு என்பது குறித்து தகவல் எதுவும் இல்லை.

வரணி நாவற்காட்டைச் சேர்ந்த கிருஷ்ணர் வேலாயுதம் (வயது 71) என்பவரே

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்கில் படை நடவடிக்கை

கொழும்பு, மே 3

வடமராட்சி கிழக்கில் இலங்கை இராணுவத்தினர் மட்டுப்படுத்தப்பட்ட படைநடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்தைக்காடு வழியாக ஓர் அணியும், மணல்காட்டுப் பகுதி வழியாக மற்றோர் அணியும் இப்படை நகர்வில் ஈடுபட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இதுவரை பெரிய அளவிலான மோதல் எதுவும் இடம்பெறவில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-9)

## விறகு வெட்டச் சென்ற மூவர் சுட்டுக்கொலை

### அழுகிய நிலையில் சடலங்கள்

மட்டக்களப்பு, மே 3

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட எல்லைப்புறக் கிராமமான தாந்தமலைக்கு விறகு வெட்டச் சென்ற தமிழ் கிராமவாசிகள் மூவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் அழுகிய நிலையில் கண்டெடுக்கப்பட்ட மூவரது சடலங்களும் மு. விஜயசிங்கம் (வயது 35), க. அன்னகேசரி (வயது 38), வ. தர்மலிங்கம் (வயது 40) என அடையாளம் காணப்பட்டன.

அறந்தலாவை 22 ஆம் கட்டை எல்லைப்புறத்தில் உள்ள ஊர்காவல் படையினரே இவர்களைக் கொன்றிருக்கலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-21-7)

## தெற்கு உதைபந்தாட்ட அணி நேற்று யாழ்.வந்தது

### இன்று முதலாவது போட்டி

யாழ்ப்பாணம், மே 3

மாத்தறை நில்மினி விளையாட்டுக்கழக உதைப்பந்தாட்ட அணி நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

நேற்று லயன் எயர் விமானம் மூலம் பலாலி வந்து சேர்ந்த 16 பேர் கொண்ட இந்த அணியை யாழ். நகர படைத் தளபதி பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் வரவேற்றார்.

முதலாவது போட்டி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். துரையப்பா ஸ்ரேடியத்தில் நடைபெறும்.

யாழ். மாவட்டத்தில் இரண்டாவது இடம் பெற்ற குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணியும் மாத்தறை நில்மினி விளையாட்டுக்கழக அணியும் இன்றைய போட்டியில் மோதுகின்றன. (இ-9)

## பாலியல்வல்லுறவுக்கு பின் 7 வயதுச் சிறுமி கொலை!

### கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

வவுனியா, மே 3

வவுனியா மேற்கு செட்டிகுளம் பகுதியிலுள்ள பாழடைந்த கிணறு ஒன்றில் இருந்து ஏழு வயதுச் சிறுமி ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் பற்றித் தெரிவிக்கப்படுவதாவது —

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழர்கள் பிரான்ஸில் பேரணி

### மேதினத்தையொட்டி

வவுனியா, மே 3

பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் நேற்று முன்தினம் ஆயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் கலந்துகொண்ட மேதினப் பேரணி ஒன்று நடைபெற்றது.

பேரணியில் கலந்து கொண்டவர்கள் ''தமிழீழத்தை அடையும்வரையில் தமிழீழப் போராட்டம் தொடரும்'' என்ற சுலோகங்களைத் தாங்கிய வண்ணம் சென்றதாக புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது. (இ-7)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் தாக்குதலில் காயம்

### ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், மே 3

ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் பருத்தித்துறையில் வைத்து தாக்குதலுக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறீகாந்த் (வயது 21) என்ற இவர் சொந்த அலுவல் நிமித்தம் விடுமுறையில் ஊர்காவற்றுறையில் இருந்து பருத்தித்துறை சென்றிருந்ததாகவும் —

சென்ற இடத்தில் மாற்று இயக்கம் ஒன்றின் முகாமைக் கடந்து சென்ற சமயம் அவர்களால் தாக்கப்பட்டதாகவும் ஈ.பி.டி.பி, யாழ். மாவட்ட அமைப்பாளர் வி. கே. ஜெகன் தெரிவித்தார்.

காயமடைந்தவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ)

# ஈழத் தமிழரின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண ஆறு அம்சக் கோரிக்கை

## தென் ஆபிரிக்க அமைப்பு வெளியிட்டது

வவுனியா, மே 3

நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனக் கோரி தென் ஆபிரிக்காவிலுள்ள அமைதிக்கும் நீதிக்குமான திராவிடர் அமைப்பு 6 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவையாவன:-

★ தொடர்ச்சியான போரால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு உணவு, மருந்து முதலிய அத்தியாவசியப் பொருள்களை உடனடியாக வடக்குக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

★ தமிழ் மக்கள் மீதான கடுமையான விமானத் தாக்குதல்களை நிறுத்த வேண்டும்.

★ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படல் வேண்டும்.

★ பேச்சு வார்த்தைக்கான

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பாக உடனடியாக கப்பல் சேவை

யாழ்ப்பாணம், மே 3

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கான பயணிகள் கப்பல் சேவை இன்று நடைபெற உள்ளது.

கப்பல் மூலம் திருகோணமலைக்குச் செல்வதற்காக யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் பெயர்களைப் பதிவு செய்து அனுமதி பெற்றவர்கள் இன்று காலை ஒன்பது மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருகை தருமாறு சிவில் நிர்வாக அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர்.

காலையில் வருவோர் தமக்கான மதிய உணவையும் எடுத்துவருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (இ-9-6)

## வள்ளங்கள் கடத்தல்

மட்டக்களப்பு, மே 3

மட்டக்களப்பு மீன்பிடிப் பயிற்சிப் பாடசாலைக்குச் சொந்தமான இருவள்ளங்கள் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு ஆயுதம் தாங்கிய சிலர் காவலாளிகளைக் கட்டி வைத்த பின்பு பாடசாலையோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்த இரு வள்ளங்களையும் வாவியினூடாகக் கடத்திச் சென்றுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-21-9)

# புலிகளின் சர்வதேச பிரமுகர் கொழும்பில் முக்கிய பேச்சு?

கொழும்பு, மே 3

விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பிரசார பிரிவில் உயர் பதவி வகிக்கும் பல்கலைக் கழக விரிவுரையாளரான தமிழர் ஒருவர் கடந்த வாரம் இலங்கை வந்து கொழும்பில் அரசாங்க மற்றும் எதிர்க்கட்சியைச்சேர்ந்த முக்கிய அரசியல் தலைவர்களைச் சந்தித்து பேச்சு நடத்திய பின்னர் யாழ்ப்பாணம் சென்றுள்ளார் என கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவில் குடியுரிமை பெற்றுள்ள இவர் ஆறு மாதங்களுக்கு முன்னரும் இலங்கை வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிப்பதற்கான பின்னணியை உருவாக்குவதே இவரின் விஜயத்தின் நோக்கமாக இருக்கலாம் என அரசியல் அவதானிகள் நம்புகின்றனர்.

அரசாங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களுடன் மேற்கொண்ட பேச்சு வார்த்தை பற்றிய விவரங்களை விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களுக்கு எடுத்துரைக்கும் நடவடிக்கைகளில் இவர் தற்போது ஈடுபட்டுள்ளார் என அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கின்றது. (இ-10-9)

## படக் காட்சி

யாழ்ப்பாணம், மே 3

நீண்ட காலத்தின் பின்னர் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்ட ராஜா தியேட்டரில் நேற்று முதல் படக் காட்சிகள் காண்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் தொழில் நுட்பக் கோளாறுகாரணமாக திட்டமிட்டபடி நேற்று படக் காட்சிகளைக் காண்பிக்க முடிய

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமவாசிகளை முகாமுக்கு அழைத்து வேலை வாங்கும் படையினர்!

## மட்டு. எம். பி. ஜனாதிபதிக்கு முறைப்பாடு

மட்டக்களப்பு, மே 8

மட்டக்களப்பு குருமண்வெளிவிசேட அதிரடிப்படை முகாமுக்கு கிராம வாசிகள் ஞாயிற்றுக்கிழமைகளில் அழைக்கப்பட்டு விறகுவெட்டும் வேலையில் ஈடுபடுத்தப்படுவதாக ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதிக்கு அவசர ''பக்ஸ்'' ஒன்றை அனுப்பி உள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குறுமண் வெளி, மகிழர், எருவில் கிராமங்களிலுள்ள 12 க்கும் 40 க்கும் இடைப்பட்ட ஆண்கள் பிரதிஞாயிறு தோறும் காலை 7.00 மணிக்கும் 10.00 மணிக்கும் இடையில் சமுகமளித்து முகாமில் உள்ள பதிவேட்டில் கட்டாயம் ஒப்பமிட வேண்டும் என பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

ஒப்பமிட்ட பின்பு அம்பாறைக் காடுகளுக்கு அவர்கள் அழைத்து செல்லப்பட்டு விறகு சேகரிப்பு, விறகு வெட்டுதல், பாதுகாப்பு அரண்கள் வெட்டுதல் போன்ற பணிகளில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

அதே நேரம் விசேட அதிரடிப்படையினர் இவர்களை மனித கேடயமாகவும் பயன்படுத்துகின்றனர்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை சமுகமளிக்க முடியாது போனவர்கள் அடுத்த ஞாயிறு சமுகமளிக்கும் போது கடுமையாக தாக்கப்படுகின்றார்.

இத்தகைய மனிதாபிமான மற்ற செயல்கள் கடந்த சில வருடங்களாக நடைபெற்று வருகின்றன.

இச்சம்பவங்கள் காலத்துக்குக் காலம் தங்கள் கவனத்துக்கு என்னால் கொண்டு வரப்பட்டன. இதனால் ஏனைய முகாம்களில் தளர்வுகள் ஏற்பட்டன. ஆனால் குறுமண் வெளி விசேட அதிரடிப்படை முகாமில் பலவந்தமாக வேலை வாங்குதல் தொடர்கின்றது.

இத்தகைய மனிதாபிமான மற்ற செயல்பாடுகள் ஜனாதிபதிக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துகின்றன.

பாதுகாப்பு படையினர் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லாத்தன்மையை ஏற்படுத்துகின்றது.

விசேட அதிரடிப்படையில் உள்ள ஒரு சாராரின் இத்தகைய நடவடிக்கைகள் தமிழ்இளைஞர்கள் மத்தியில் விரக்தி ஏற்படுத்துவதுமட்டுமன்றி அந்த இளைஞர்கள் விடுதலைப் புலிகள் பக்கம் சாரவும் தூண்டும்.

இந்நிலையில் இவ்விடயம் குறித்து உரிய நடவடிக்கைகள் எடுத்து இதனை நிறுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்''.

இப்படி அவர் குறிப்பிட்டுள்ளார். (இ-21)

## சுத்திகரிப்பு தொழிலாளர்

யாழ்ப்பாணம், மே. 3

யாழ். ஆஸ்பத்திரியில் சுத்திகரிப்புத் தொழிலாளர் பதவிக்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட 30 பேரில் தற்போது 22 பேர் கடமையைப் பொறுப்பேற்றுள்ளனர்.

(இ-139)

## மரண அறிவித்தல்கள்

திருமதி

### கந்தையா இராசமணி

(Retd. Principal - N/Alnwick Tamil Vidy, udapussellawa)

நவாலியைப் பிறப்பிடமாகவும், மாதகல், இருபாலை ஆகிய இடங்களில் வசித்தவருமாகிய திருமதி கந்தையா — இராசமணி 1 - 5 - 98 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் (Retd—Principal N/Alnwick T/Vidy) அன்பு மனைவியும், தம்பிப்பிள்ளை, காலஞ்சென்ற குமாரசாமி, காலஞ்சென்ற செல்வராஜா, இராஜேஸ்வரி, காந்திமதி ஆகியோரின் சகோதரியும், சிதம்பரநாதன் (அஞ்சல் அதிபர், உரும்பிராய்), பத்மநாதன் (கணக்காளர், வங்கி கனடா), யோகேந்திரராணி (ஆசிரியை N/Tales Tamil Vidy, udapussellawa), இந்திராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், தியாகேஸ்வரி, கதிரமலை — ஜெகஜோதி ஆகியோரின் மாமியாரும், பரணீதரன் (சென். ஜோன்ஸ் கல்லூரி, க. பொ. த. உயர்தரம் கணிதம்), சிறீகரன் (யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி), காயத்திரி (கணக்கியல், பல்கலைககழகம் கனடா), பத்மகௌரி, சண்முகப்பிரியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (05 - 05 - 98) செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்று பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
க. சிதம்பரநாதன் (மகன்)
அஞ்சல் அதிபர்

''திருக்கணிகை''
டச்சு வீதி,
இருபாலை.

(55713)

திருமதி

### கந்தசாமி விமலாம்பாள்

(ஆசிரியை, புன்னாலைக்கட்டுவன் அ.த.க. பாடசாலை)

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த திருமதி கந்தசாமி விமலாம்பாள் 02-05-1998இல் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான விசுவப்பிள்ளை பொன்னம்மாவின் மகளும், சரவணமுத்து கந்தசாமியின் (சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை) அன்பு மனைவியும், கருகம்பானையைச் சேர்ந்த காலஞ்சென்ற சரவணமுத்து, நகுலேஸ்வரியின் மருமகளும், மீனலோஜினி (கனடா), கஜரூபன், சித்திரா (மாணவர்கள், வசாவிளான் ம. ம. வி.) ஆகியோரின் அன்புத் தாயாரும், கோபிமனோகரனின் (கனடா) மாமியாரும், சகானாவின் அன்புப் பேர்த்தியும், வேலாயுதம் (C.T.B, கோண்டாவில்), லோகாம்பாள் (மாங்குளம்), ஜெயகாந்தன் (U.K.) ஆகியோரின் சகோதரியும், சிவபாதம், பாலசுப்பிரமணியம், பாலசிங்கம் (நீர்வடிகால் திணைக்களம், வவுனியா), சிறிஸ்கந்தராஜா (சவூதி), சிவமலர், நேசமலர், ரதிமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (3-5-98) பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் புன்னாலைக்கட்டுவன் தெற்கு விலவகன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. கந்தசாமி
(கணவர்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

(55716)

### திருமதி பரமகுரு அமுதவல்லி

(ஓய்வு பெற்ற மருத்துவ மாது)

திருமதி பரமகுரு அமுதவல்லி 1-5-98 இல் காலமானார்.

அன்னார் திரு. சி. பரமகுரு (ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இரத்தினசபாபதி — சின்னம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற கணதேவகுரு, சிவஞானகுரு (ஜேர்மனி), பரமானந்தவல்லி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சோமநாதர் அவர்களின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் திருவடிநிலை மயானத்தில் 2-5-98 இல் நடைபெற்றன.

இத்தகவலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. பரமகுரு
(கணவன்)

பண்ணாகம்,
சுழிபுரம்.

(55699)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### குருசுமுத்து அந்தோனிப்பிள்ளை

(அச்சுவேலி)

மலர்வு: 31—08—1935

உதிர்வு: 03—05—1996

அல்லும் பகலும் அயராது உழைத்திட்டு
பாசமுடன் எமை வளர்த்த பாசமிகு அப்பாவே!
ஆண்டிரண்டு சென்றாலும், ஆறாதப்பா எம்துயரம்
பரகதிநீர் சென்றிடவே பரமனையேவேண்டுகின்றோம்!

தங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்.

தென்மூலை,
அச்சுவேலி.

(55707)

## தகனக்கிரியை பிற்போடப்பட்டுள்ளது

2-5-98 இல் நடைபெறுவதாக உதயன் பத்திரிகையில் அறிவிக்கப்பட்டிருந்த அமரர் ஐயாத்துரை பஞ்சலிங்கம் அவர்களின் தகனக்கிரியை பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறேன். அதன் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

A. P. செல்வராஜா
(மகன்)

(50050) [இ.போ.ச சாரதி]

## மரண அறிவித்தல்கள்

### செல்வநாயகம் சுகிர்தநாயகம்

(அப்பு, நாயகம்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், சோதிவேம்படி ஒழுங்கை மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் சுகிர்தநாயகம் 30-04-98 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், சுரேந்திரன் (சின்னப்பு, டோகா), திருச்செல்வம் (டோகா), சுகிர்தாஈஸ்வரி (சுவிஸ்), கேதீஸ்வரி (சுவிஸ்), சிவராஜா ராஜி ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்திரன் (சுவிஸ்), கலாறஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், பவித்திரா (சுவிஸ்), திசியா, நிலக்சன் ஆகியோரின் அன்புப் பேரனும், பாலநாயகம் (எயர்போஸ், கொழும்பு), திருமதி புனிததேவி, காலஞ் சென்ற பத்மாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சாந்தகுமார், செல்வம், உதயகுமார் (ஆஸ்திரேலியா), சூரியகுமார் (மகாராஜா), உதயகலா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் தாய்மாமனும், சுசிகலா, சிவபாலன் (கனடா), சிவரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (3-5-98) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி மயானத்துக்குத் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
திருமதி சு. நகுலேஸ்வரி (மனைவி)
சு. சுரேந்திரன் (சின்னப்பு)
(மகன்)

சோதிவேம்படி ஒழுங்கை,
மானிப்பாய்.

[55710]

### சிதம்பரம் அருளானந்தம்

(பிரதம கணக்காளர், நியூ லீலா அச்சகம்)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கு நாவலம்பதியில் வசித்தவருமான சிதம்பரம் அருளானந்தம் 01 — 05 — 1998 வெள்ளியன்று வவுனியாவில் மாரடைப்பால் காலமானார்.

அன்னார்அருளானந்தம்—சின்னம்மாவின்அன்புக் கணவரும், ஆனந்தகுமார் (சுகாதாரத் திணைக்களம்), பிறேமளாசாந்தினி, சாந்தகுமார், (ஆவுஸ்திரேலியா), காயத்திரி சாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்தக்குமார் அமுதாவின் அன்பு மாமனாரும் க. பொன்னம்மா, க. தெய்வானைப்பிள்ளை, வே. லக்ஷ்மி, கோ. எள்ளுப்பிள்ளை, சி. குண்டுமணி, அ. கண்ணகை, இ. குணமணி, சி. சின்னப்பு ஆகியோரின் சகோதரரும் க. கோவிந்தன், காலஞ்சென்ற க. சிவபாதம், க. சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருப்பதி கிறசர் நா. பாலசிங்கம் அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வவுனியாவில் உள்ள இந்து மயானத்தில் நேற்று 02 — 05 — 1998 இல் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
க. சுப்பிரமணியம்

'' காட்டுமலை இல்லம் ''
நாவலம்பதி,
அச்சுவேலி.

(55715)


## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

இன்று முதல்
பிரசாந்த், ஐஸ்வர்யா, செந்தில், நாசர்
நடித்த
**ஜீன்ஸ்**
புதிய வெளியீடு
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
தொலை பேசி இல.
070 - 212223
(55326)

## நாகம்ஸ்

சினிமா
அகல வெண்திரையில்
03-05-98 ஞாயிறு
விஜய், ரம்பா
**நினைத்தேன் வந்தாய்**
(CD வெளியீடு)
காட்சி 10- 30 — 2-30
(55711)

## சிவா திரையில்

கே. கே. எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.
காட்சி 10-00 — 1-00
பிரசாந்த், ஐஸ்வர்யா
நடித்த
ஜீன்ஸ்
புதிய வெளியீடு
(55717)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பத்தில் இன்பம் செவியின்பம்;

# அதனிலும் சிறந்தது பேரின்பமே!

இன்பமெங்கே, இன்பமெங்கே
என்றுதேடு– அது
எங்கிருந்த போதுமதை நாடி
ஓடு–

இது சினிமாவில் முன்பு நாம் கேட்டபாடல்.

உலகிலே உள்ள ஜீவராசிகள் அனைத்துமே இன்பத்தை நாடியே அலைகின்றன. ஓரறிவுள்ள புழுவும். வெய்யிலைக் கண்டதும் துடித்து ஓடோடி புல்பற்றையில் பதுங்கிநுழைந்துபுரண்டு புரண்டு தேக சுகம் கண்டு திளைக்கின்றது. ஈரறிவுள்ள வண்டும் ரிங்காரம் செய்து மலர் தோறும் அமர்ந்து மரகதத் தேனை மாந்தி மகிழ்கின்றது. இதேபோல் மூவறிவு முதலாக ஐந்தறிவுள்ள அனைத்து ஜீவராசிகளுமே உடல் இன்பம் தேடி இன்பத்தைப் பெருக்கி, இன்புற்று, உணவும் உண்டு உறைவிடம் கண்டு உள்ளூர மகிழ்கின்றன.

ஆறாவது அறிவினைப் பெற்ற மானிடனோ, பல படி முன்னேறி பஞ்சாம பாதங்களையும் செய்து, இந்த இன்பத்தையே தேடி அலைகிறான். சற்றே ஆழமாக ஆராயின் மனித குலத்தின் நாட்டமெல்லாம் இன்பத்தைப் பெறும் ஒரே நோக்கை மையமாகக் கொண்டே விளங்குகின்றது.

இந்த மானுடம் தேடும் இன்பம், ஐந்தறிவு ஜீவன்களை விடச் சற்றே வேறுபட்டு நிற்கின்றது! ஐம்புலன்களாலும் வரும் இன்பத்தையே மனிதகுலம் தேடி அலைகின்றது. நுகர்வதால் வரும் இன்பம், நாவினால் வரும் இன்பம், கண்களால் வரும் இன்பம் காதினால் வரும் இன்பம் உடல்தீண்டுவதால் வரும் இன்பம் இவ்வாறு ஐந்துவகையாக இன்பங்களை அனுபவிக்கின்றான் மானிடன்.

ஆடு, மாடு, யானை, பூனை போன்ற மிருகங்கள். பூஞ்சோலை. மாமலை. நீர்வீழ்ச்சி இவற்றைக் கண்டு தரித்து நின்று கண்டு களிப்பதில்லை. மற்றும் அத்தர், புனுகு, ஐவ்வாது இவற்றை நுகர்வதையோ அன்றி இன்னிசை விருந்தைக் கேட்டு மெய்மறந்து ரசிப்பதில்லை. மனிதனோ ஐம்புலனுக்கும் அடிமையாகி அவற்றால் வரும் இன்பத்தில் திளைக்கின்றான்.

கண். காது, மூக்கு, இவையால் பெறும் இன்பம் மனிதனுக்கே தனித்துவமானது. இவற்றை வரிசைப்படுத்தினால், இந்த இன்பங்கள் ஐந்து வகைப்படும். இவற்றில் எந்த இன்பம் முன்னிலைப்படுகின்றது என்பதைச் சற்றே ஆராய்வோம். இவற்றில் உடல் இன்பத்தை விட நாவின்பமும், நாவை விட நாசி தரும் இன்பமும் உயர்ந்தது. நாசியையும் விட கண்கள் தரும்இன்பம் சிறந்தது. இவை அனைத்தையும் ஒருசேர விட இன்பம் தருவது செவியால் வரும் இன்பமே.

இதனைக் கண்டறிந்து கூறியவர் சாமானியர் அல்லர். அறிவின் சிகரம் இவரே எனக் கண்டறியப்பட்ட தெய்வப் புலவர் திருவள்ளுவரேயாவார். இவரது கருத்துப்படி.

''செவியிற் சுவையுணரா
வாயுணர்வின் மாக்கள்
அழியினும் வாழினும் என்''

செவியினால் வரும் உன்னதமான இன்பத்தை உணராது நாவினால் வரும் இன்பத்தை மட்டும் உண்பவர்கள் இறந்தால் தான் என்ன; இல்லை வாழ்ந்தால் தான் என்ன? யாது பயன் பெற்றார்கள்? என்று வினவுகிறது வள்ளுவம்.

இதற்கு அப்பாலும்சென்ற வள்ளுவர்—

''செல்வத்துட் செல்வம்
செவிச் செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை''–

என்றே வலியுறுத்துகின்றார்.

இனி இச்செல்வம் உண்மையில் உயர்ந்தது தானா? வள்ளுவப்பெருந்தகை எதன் நிமிர்த்தம் இதனை வலியுறுத்திச் சென்றார் என்பதை நோக்குவது சிந்தனைக்கு விருந்தாகும்.

பஞ்சணை விட்டு இறங்கியதும் அது வரை கண்ட உடல் பெற்ற இன்பம் மறைந்து விடும். மின்சாரம் நின்றதும் குளிரூட்டி நின்று விடும். உடனேயே உடல் பெற்ற இன்பமும் பின் உபத்திரமாக மாறிவிடும். பழரசமும் தொண்டையைத் தாண்டியதும் அதன் சுவை தொலைந்து விடுகின்றது. நாசிக்கு அப்பால் வாசனைத் திரவியத்தை எடுத்து விட்டால் நறுமணம் தந்த இன்பமும் தூரத்தே போய் தொலைந்து விடும். கண்ணை மூடிவிட்டாலோ கண்ணுக்கு அப்பால் போய் விட்டாலோ கடல் அலையும், பூங்காவின் அழகும்,

## சூரியகாந்தி
## உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

நீர்வீழ்ச்சியுமே மறைந்து விடுவதுண்டு. ஆனால் 'செவியினால்' ஒருவர் பெறும் இன்பம் இலகுவில் அழிந்து மறைந்து விடுவதில்லை. பாலர் பாடசாலையில் படித்த அரிச்சுவடு தான், ஒருவர் பேரறிஞராகி பின் வயதில் முதிர்ந்து படுக்கையாகி பாடையேறும் மட்டும் உள்ளத்தில் பதிந்து விடுகின்ற தமிழ் அரிச்சுவடு.

அது மட்டுமா?

பத்து வயதிலே பாலராகக் கேட்ட எத்தனை பாடல்கள், படித்த கதைகள், கேட்ட இன்னுரைகள், ஏன் பாட்டி சுட்ட வடையும் தந்திரமாக நரி தூக்கிய கதையும் கூட நம் நினைவில் நிற்கவில்லையா? இத்தனைக்கும் காரணமான கருவி காது என்பதை ஊன்றி உணர்ந்த வள்ளுவர் இக்குறளில் செவியின் பெருமையைச் செப்பி உள்ளார். இதனால் தான் போலும் ஆண், பெண் என்று பேதமைகாட்டாது, பண்டைய தமிழர் சமுதாயம் இருபாலருக்குமே தோடு என்றும் கடுக்கண் என்றும் காதுக்கு நகை பூட்டி மகிழ்ந்தது. இதனால்தான் போலும் எனக்கு காது குத்தாதே என்றும் காதில் பூ வையாதே என்றும் பேசப்படுகின்றது.

### ஞானசம்பந்தர் கண்ட செவி

இனி ஞானசம்பந்தக் குழந்தை பாடிய முதற் பாட்டை சற்றே ஊன்றி ஆராய்வோம். வயது மூன்று மட்டும் எய்திய அக்குழந்தை தெய்வீகத் திருக்குழந்தை. தவப்பேறால் அவதரித்து சீர்காழியில் சிவபாதவிருதையர் தந்த, சைவநெறி தழைத்தோங்க அவதரித்த தெய்வக் குழந்தை. உமையவள் தந்த திருமுலைப் பாலை உண்டு முதலாவது பாடலைப் பாடுகின்றது.

இப்பாடலில் எடுத்த எடுப்பிலேயே 'தோடுடைய செவியன்'' என்று ஏன் இக்குழந்தை செவியை முதன்மைப்படுத்தியது? என்பது சிந்தனைக்குரியது. நெற்றிக் கண்ணையோ, மதி சூடிய தலையையோ, கங்கையையோ, பொன்னார் மேனியினையோ, திருவாயையோ முதலில் விளிக்காத மகவு ''தோடு எனும் அணியினைப் பூட்டிய செவியினை உடைய சிவன்'' என்பது சிந்தனைக்கு விருந்தளிக்கின்றது.

இதன் உட்பொருளை இனிது நோக்குவோம். 'ஓ' என்ற பிரணவத்தின் முதன் எழுத்தை முதன்மைப்படுத்தினார் என்பது ஒரு கருத்து, அடுத்து இத்தனை அண்மையிலும், தேவரும் தேட ஒண்ணா அத்தனை தொலைவிலும், திருநடம் புரியும் சிவனாருக்கு குழந்தையின் அழுகுரலை எட்ட வைத்து மண்மிசை வருததற்கு வழி வகுத்தது சிவனாரின் ''செவி'' என்பதால் போலும் அச்செவிக்கு முதல் நன்றி சொன்னார் ஞான சம்பந்தர் என்றும் கொள்ளலாம்.

இன்னும் சற்று ஆழமாக ஆராய முற்படின் துணிமணி நகைநட்டு, பட்டுப் பீதாம்பரம் இப்படியாகக் கண் கவரும் காட்சியை சிவனார் கொண்டிருக்கவில்லை. விரித்த செஞ்சடை, புலித் தோல், அனல் ஏந்தும் கை, தலையினில் கங்கை இப்படியாக வெண்சாம்பல் பூசிய விமலன் கூட காதினில் தோடல்லவா மாட்டியுள்ளார். இந்த காட்சி அந்த பச்சிளம் பாலகனது உள்ளத்தையே வியப்பில் ஆழ்த்தியதில் வியப்பில்லை.

எது எவ்வாறிருப்பினும் சிவனாரும் செவிக்கு தோடு அணிந்துள்ளார். தோட்டினால் தன் செவியினைச் சிறப்பித்துள்ளார் என்பது ஈண்டு கவனத்திற்குரியது.

மணிவாசகப் பெருந்தகையின் கருத்தை ஆராய முற்படின் செவிச் செல்வமும் சிற்றின்பமே என்பார் மணிவாசகனார். மானிடர் புவிமிசை அனுபவிக்கும் இன்பங்கள் அனைத்துமே சிற்றின்பம் எனில் மணிவாசகம் கூறும் வேறு ஓர் இன்பம் இருக்கத்தான் செய்கின்றது. அதுதான் எது என அவரிடம் கேட்ட பின் அவர் அதனைப் 'பேரின்பம்' என்று பேசுகின்றார்.

**மூ. திருநாவுக்கரசு**
(மாவட்ட நீதிபதி, மல்லாகம்)

(8 ஆம் பக்கம் பார்க்க)

## எதிரொலி

● ஜெயலலிதா கொடுத்து வரும் நெருக்கடியினால் பாரதீய ஜனதாக் கட்சி அரசு ஆட்டங்காண்கிறது.

★ ஆவதும் தன்னால் அழிவதும் தன்னால் என்பதை நிரூபிக்க முயல்கின்றாரோ?

● பிரதமர் பதவிக்கு லக்ஷ்மன் ஜெயக்கொடியே நியமிக்கப்பட வேண்டும் என ஸ்ரீமாவோ விரும்புகின்றார்; ஜனாதிபதி சந்திரிகாவின் ஆதரவு அனுருத்த ரத்வத்தைக்கே!

★ அம்மாவுக்கும் அக்காவுக்குமிடையே இந்த விடயத்தில் மட்டுந்தானா கருத்து வேறுபாடு? எனக் கேட்கிறார் அனுரா

● ஜெயலலிதாவின் பின்னால் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி.

★ யாராவது ஒருவரின் பின்னால் நின்று பிலாக்கணம் பாடுவதுதானே அவருடைய தொழில்.

● இலங்கை இனப் பிரச்சினையில் மத்தியஸ்தம் செய்வதற்கு அழைத்தால் வரத் தயார் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

★ அழைக்காமலே வந்தவர்கள் தான், அழைத்தாலும் வருவதாகச் சொல்கிறார்கள்!

● மே மாதம் முடியும் வரை இப்போதைய வெப்பநிலை நீடிக்கும்.

★ வாசிக்கும்போதே வியர்க்கிறது!

● தொழிற் சங்க நடவடிக்கையை முறியடிப்பதற்காகத் தபால் சேவையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனஞ் செய்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்யத் தொழிற் சங்கங்கள் திட்டம்.

★ அரசாங்கத்திற்குத் தபாற் சேவை, அத்தியாவசிய சேவை; தொழிற் சங்கங்களுக்கு ''வேலை நிறுத்தம்,'' அத்தியாவசிய தேவை!

● ''ஜா''வுக்கு எதிராகக்கொழும்பில் ஆர்ப்பாட்டம்; பிக்குகள் இந்திய எதிர்ப்புக் கோஷம்!

★ புத்த பிக்குகளா? யுத்தபிக்குகளா?

● பூட்டா சிங், இனி எந்தக் கட்சியிலும் சேரமாட்டார்!

★ சேர மாட்டாரா? சேர்க்கப்பட மாட்டாரா?

– இடியன்

# கல்வி சமூக மேம்பாட்டிற்காக சலிப்பின்றி உழைத்தவர்

அன்ன சத்திரம் ஆயிரம் அமைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல் அன்னயாவினும் புண்ணியங்கோடி அங்கோர் ஏழைக்கு எழுத்தறிவூட்டல் என்ற பாரதியின் கருத்தை கருமத்தில் செய்தவர் அவர். சுன்னாகத்



தில் அன்று அவரவர்க்கு ஒரு பாடசாலை. அவர் அங்கே தான் கற்கலாம். அக் கால கட்டத்தில் ''நாகேஸ்வரி'' என்ற பெயருடன் ஓர் ஆரம்ப பாடசாலையை ஸ்தாபித்து, அதில் [illegible] தவரும் ஒன்றமர்ந்து, ஜாதி மத வித்தியாசமின்றி கல்வி பயில, ஒரு சோசலிச சமூதாயம் மலர அன்றே வித்திட்டவர் அவர்.

பின்னர் அரசாங்கம் செய்த இலவசக்கல்வி, சத்துணவு திட்டங்களை முன்பே செயலில் காட்டியவர். நாவலர் வழி சைவமும் தமிழும் செழிக்க யாழ். குடாநாடெங்கிலும் கல்விக் கூடங்கள் ஆரம்பிக்கப்பட்ட

## ஆன்றோர் நினைவு

வேளை, சுன்னாகத்தில் ஒரு கல்விக் கூடத்தை ஸ்தாபித்தவர் அவர். அவர் தான் அமரர் விசுவலிங்கம் சிவசுப்பிரமணியம்.

நாகேஸ்வரி வித்தியாலயத்தின் ஸ்தாபகர் அவர்கள் தமது முதுமைப்பருவத்திலும் இப் பாடசாலையில் நடைபெறும் ஒவ்வொரு வைபவங்களிலும் கலந்து கொண்டு அனறு தமது பாடசாலை என்று எந்த உணர்வோடு செயற்பட்டாரோஅதுமாறாமல் இறுதிவரை நடந்தவர். ஸ்தாபகர் எந்த நோக்கத்துடன் இந் பாடசாலையை ஸ்தாபித்தாரோ, அந் நோக்கத்தை தொடர்ந்தும் செயற்படுத்தி எம்மண்ணில் நாகேஸ்வரி புகழ் வளர்க்க நாமும் முயல்தல் வேண்டும்.

திரு. திருமதி விசுவலிங்கம் மாரிமுத்து தம்பதிகளுக்கு ஏக புத்திரனாக 03-09-1909 ஆம் ஆண்டு அவதரித்தார் திரு. சிவசுப்பிரமணியம். இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ். இந்துவில் பயின்றாலும், தமது பிறந்த மண்ணில் தம் கல்வியைத் தொடர்ந்து தனது சமூகத்துக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற நல்நோக்குடன் அன்று சிறு பாடசாலையாக இருந்த ஸ்கந்தாவில் மேற் கல்வியைத் தொடர்ந்தார்.

**கே. சிவாஜி**
அதிபர்,
ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

ஸ்கந்தா ஸ்தாபகர் திருவாளர் கந்தையா உபாத்தியாயரின் செல்லப்பிள்ளையாக இருந்த இவர் லண்டன் கேம்பிறிஜ் பரீட்சை சித்தி எய்தியவுடன், அவருடைய 17 ஆவது வயதில் ஸ்கந்தாவில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

( 4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விச் சமூக ...

(மூன்றாம் பக்கத் தொடர்)

தொடர்ந்த அவரது திறமையால் லண்டன் B A, B. Sc பரீட்சைகளிலும் சித்தி பெற்றார். இவருடைய திறமையைக் கண்ட ஸ்தாபகர் 1944 ஆம் ஆண்டு ஸ்கந்தாவின் அதிபர் பதவியை ஏற்கும்படி வற்புறுத்தினார். ஆனால் இவரோ தன்னிலும் மூத்த உறுப்பினர் இருக்கையில் தமக்கு இப்பதவி வேண்டாமென பெருந்தன்மையோடு மறுத்து விட்டார். இதனால் இவருக்கு உப அதிபர் பதவி வற்புறுத்திக் கொடுக்கப்பட்டது. இந்நிலையில் அதிபர் ஒருவரைத் தேடும் நிலை ஏற்பட, ஸ்தாபகர் இவரையும் துணைகொண்டு, அதிபர் தேடும் வேட்டையில் இறங்கினார்கள். அப்பொழுது கட்டுடையை சேர்ந்தவரும், யாழ். இந்துவில் விடுதி அதிகாரியாக கடமையாற்றிக் கொண்டிருந்த திரு. சி. சுப்பிரமணியம் என்பவர் இவர்கள் கண்ணில் பட, அவர் அதிபராக்கப் பட்டார். அவர் தான் ஸ்கந்தாவின் 'ஒரேற்றர்'

### ஸ்கந்தாவுக்கு முதலிடம்

இந்த இரு மணியங்களுடைய சேவையில் ஸ்கந்தா முதல்தர பாடசாலையாக தரத்தில் உயர்ந்தது. திரு. வி. சிவசுப்பிரமணியமும் முதலாந்தர அதிபராகப் பதவி உயர்த்தப்பட்டார். "ஒறேற்றர்" ஓய்வு பெற்றதும் இவர் அதிபராக பதவி உயர்த்தப்பட்டார்.

அக்காலத்தில் பல்கலைக் கழகத் தெரிவில் அகில இலங்கையிலும் கூடுதலான மாணவர்கள் தேர்ச்சி பெற்று ஸ்கந்தா முதலிடத்தைப் பெற்றதை குறிப்பிடத்தக்கது. இப்படியாக மாணவனாக, ஆசிரியனாக, 18 வருடங்கள் உப அதிபராக, 7 வருடங்கள் அதிபராக ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலத்தை ஸ்கந்தாவின் வளர்ச்சிக்காகவே கழித்தவர்.

இதனால் தான் போலும் 'ஒறேற்றர்' அவர்கள், பல மேடைகளிலும் விழாக்களிலும் "நான் வெளிநாட்டு மந்திரியாக திரு. வி. சிவசுப்பிரமணியம் உள்நாட்டு மந்திரியாக கடமை ஆற்றினோம். ஆகவே சகல பெருமையும் அவரையே சாரும்" என்று குறிப்பிட்டார்.

எமது 'வைசர்' கல்வி போதிக்கும் முறையே ஒரு தனிப்பாங்கு. தோளில் உள்ள சால்வையை நேர் செய்து மணிக்கட்டையும் தாண்டி நிற்கும் நாஷனலை மேலிழுத்துவிட்டு, உள்ளங்கைகளை உரசி, ஒரு முறை மூக்கைத் தேய்த்து உறிஞ்சிவிட்டு" பிள்ளைகளே நாம் இப்போது இந்தப்பாடத்தை பார்ப்போம்" என்று தொடங்கினால் வாழைப் பழத்தில் ஊசி ஏற்றியது போல இவரது போதனை ஒவ்வொரு மாணவனையும் சென்றடைந்தது.

ஸ்கந்தாவின் அதிபர் காலத்தில் அமெரிக்கா செல்ல இவருக்கு புவியியல் துறையில் புலமைப்பரிசில் கிடைத்தும் அதை மறுத்து எமது பாடசாலைவளர்ச்சிக்காகப் பாடுபட்டவர். இக்கால கட்டத்தில் தென் இலங்கை கல்விமான்களாகிய ஆனந்த குருகே, ஜினதாச சமரக்கொடி, மலலசேகர, வில்மட் பெரேரா போன்றவர்களை கல்லூரி வைபவங்களுக்கு விருந்தினர்களாக அழைத்து இன ஒற்றுமையைப் பேணினார்.

அதிபர் காலத்தில் ஸ்கந்தாவில் கல்வி கற்றவர் பாணந்துறையைச் சேர்ந்த அமரர் டி. டி. நாணயக்கார. அவர் இலிப்பேகே மகாவித்தியாலயத்தில் அதிபராக இருந்த காலத்தில் எமது அதிபரின் உதவியுடன் திரு. சி. பொன்னம்பலம் அவர்களிடம் தமிழ் படித்தவர். இளைப்பாறிய பின் இந்து கலாசார அமைச்சில் தமிழ் மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றினார். டி. டி. நாணயக்கார, அதிபரை கௌரவிக்கும் நோக்குடன் தமது பாடசாலைப் பரிசளிப்புவிழாவிற்கு பிரதம அதிதியாக 1966 ஆம் ஆண்டு அழைத்து, இவரை தமிழில் உரையாற்றும் படி வேண்டி, தாம் சிங்களத்தில் மொழி பெயர்த்தார்.

இவரிடம் படித்த தலைசிறந்த சோசலிச அரசியல் வாதிகளான, 27 வருட தொடர் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் திரு. வி. தர்மலிங்கம், அமரர் வி. பொன்னம்பலம், அமரர் திரு. கு. விநோதன், தற்போதைய எம். பி.க்கள் திரு. டி. சித்தார்த்தன், திரு. டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் பிரபல்யமானது பலருக்கும் தெரிந்தவிடயம்.

ஆசிரியத் தொழிலுடன் நின்றுவிடாது தமது கிராம மக்களின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திலும் ஆர்வங் காட்டி மக்களோடு மக்களாக உறவாடி அவர்களின் பிரச்சினைகளில் பங்கு கொண்டு அவ்வப்போது ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்கிவந்தார்.

இவர் சிறந்த சோதிட வல்லுநருமாவார். தம்மை அணுகுபவரிடம் அமைதியாக யாவும் விசாரித்து அவர்தம் சோதிடத்தை சரிவரக்கணித்து ஆலோசனைகள் வழங்குவார். 1970 ஆம் ஆண்டு அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றார். 1971 இல் அக்கால அரசினால் மக்கள் குழுக்கள் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டு தலைவராகவும் விளங்கி எமது கிராமத்தவரின் பல பிணக்குகளையும் சுமுகமாகத் தீர்த்து வைத்தார்.

நீதித் துறையிலும் பல ஆண்டுகளாக 'யூரி' சபைப் பிரதிநிதியாக யூரி சேவையும் செய்தவர். எமது சுன்னாக பட்டினத்தில் ஒரு சிறந்த நூலகம் அமைக்கவேண்டுமென்ற அவாவுடன் அக்கால பட்டினசபைத் தலைவராக இருந்த அமரர் செனற்றர் நாகலிங்கத்துடன் இணைந்து செயற்பட்டவர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் பி. கந்தையா அவர்கள் புவியியல் சம்பந்தமான சில பிரச்சினைகளை ஆராய இவரிடம் அணுகியபோது நாசூக்காக மகாவலிகங்கையை வடக்கே திருப்புவது பற்றி சில ஆலோசனைகளை முன்வைத்தார். அதுவே நாடாளுமன்றத்தில் எடுக்கப்பட்டு இன்று மகாவலித் திட்டமாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது.

இப்படியாக எமது 'வைசர்' எமது அதிபர், சமூகத்தொண்டர் என்று அன்னாரின் பெருமைகளை அடுக்கிக்கொண்டே போகலாம். இவை ஒரு சிறுதுளிகள், [illegible]

ST. JOHN'S COLLEGE JAFFNA CEYLON

# ST. JOHN'S COLLEGE
## JAFFNA

### PROGRAMME FOR 175th ANNIVERSARY CELEBRATIONS

**7th MAY 1998 THURSDAY**

| | |
|---|---|
| 08. 30 - 09. 30 | Holy Eucharist. Preacher and celebrant The Rt. Revd. K. M. J. FERNANDO, Bishop of Colombo. |
| 09. 45 - 10. 30 | Assembly. |
| 10. 30 - 11. 00 | Issue of Commemorative Stamp. |
| 11. 00 - 11. 45 | Felicitation of Tutorial & Non Tutorial staff. |
| 12. 00 - 12. 45 | Opening of New Block. |
| 13. 00 - 14. 00 | Lunch OBA, Jaffna ( Ticket ) |
| 16. 00 - 16. 30 | Laying of Foundation for new Administrative Block followed by meeting in Peto Hall. |
| 17. 00 - 18. 00 | Principal's Tea. |

**8th MAY 1998 FRIDAY**

| | |
|---|---|
| 08. 30 - 12. 00 | Opening of Science Block followed by Cricket Match |
| 09. 30 - 11. 00 | Cultural Programme at Peto Hall. |
| 11. 30 - 12. 30 | Tour of the College. |
| 16. 15 - 18. 00 | Football Match |

**9th MAY 1998 SATURDAY**

| | |
|---|---|
| 10. 00 - 13. 00 | Prize Giving at Peto Hall. Programme concludes with Principal's Speech. |

**Parents, Old Boys & Wellwishers are cordially invited**

Principal, Staff and Students

(C/3469)

## சுழிபுரம் சந்தைக்கு காரைநகர் மீன் வருகிறது

சுழிபுரம் சத்தியக்காட்டு சந்தையில் தினமும் காரைநகர்ப் பகுதியில் இருந்து வருகை தரும் வியாபாரிகள் காய்கறி வகைகளை வாங்கிச் செல்கின்றனர். அதே போல் காரைநகர், பொன்னாலைக் கடல்களில் பிடிக்கும் மீன், இறால் சுழிபுரம் சந்தைக்கு வியாபாரிகளால் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன.

பொன்னாலைப் பாலப் பாதை போக்குவரத்துக்கு திறக்கப்பட்ட பின்னர் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. தினமும் காரைநகர் பகுதியில் வாழ்பவர்கள் சுழிபுரம் மூளாய் பகுதிகளுக்கு வந்து செல்கின்றனர். (ஐ-28)

LEO

# சர்வதேச லயன்ஸ் கழகம்

## மாவட்டம் 306 பி ஸ்ரீலங்கா

யூன் மாத நடுப்பகுதியில் பிராந்தியம் 8இன் இளம் லியோக்களின் எழுச்சி விழாவாக கொண்டாடப்படவுள்ள

## "லியோ கருத்தரங்கு"

நிகழ்வை யொட்டி
மாவட்ட லியோ தலைவரால்
நடத்தப்படும்
லியோ கழகங்கள் இயங்கும் பாடசாலைகளில்
பெண்களுக்கான
பாரம்பரிய விளையாட்டுப் போட்டியான

## "கிளித்தட்டு"

கல்வித்துறையில் மாணவ உலகில் மிக ஈடுபாடு கொண்ட

## "போஸ்கோ" நிறுவன

அனுசரணையுடன் நடைபெறும்.
இப் போட்டியில்

## வெற்றிக் கிண்ணம் சான்றிதழ்களுடன்

பரிசாக வழங்கப்படவுள்ளது

### போட்டி விதிகள்

1. லியோகழகங்கள் இயங்கும் பாடசாலை மாணவிகள் பங்கு கொள்ளலாம்.
2. போட்டியில் பங்கு கொள்வோர் தமது விண்ணப்பங்களை 09 - 05 - 1998 ஆம் திகதிக்கு முன் 'தலைவர்' லியோக்கழகம், யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்கவும்.
3. போட்டியில் பங்கு பற்றுவோர் புதிய நேரம் பிற்பகல் 2-00 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் சமுகமளிக்கவும்.
4, போட்டி பற்றிய மேலதிக விவரம், விதிகளை வேம்படிமகளிர் கல்லூரி லியோகழகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும்.
5 போட்டிகள் 12 - 05 - 1998, 13 - 05 - 98 திகதிகளில் நடைபெறும்.
6. போட்டியில் நடுவரின் தீர்ப்பே இறுதியானது.

போட்டி ஒழுங்கமைப்பு

## "லியோ கழகம்"

வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

**லயன். பா. தவபாலன்**

மாவட்ட லியோ தலைவர்
சர்வதேச லயன்ஸ் கழகம்
மாவட்டம் 306 பி ஸ்ரீலங்கா.

விளம்பர உதவி:

மாணவ உலகின் நம்பிக்கை நட்சத்திரம்
நியாயமான விலையில்
அப்பியாசக் கொப்பிகள், பாடசாலை,
அலுவலக உபகரணங்கள்,
ஸ்ரேசனறிஸ் விற்பனையாளர்களும்,
அச்சிடுவோரும்

# போஸ்கோ

| | |
|---|---|
| இல. 3, | இல. 252, |
| நவீன சந்தை, | பருத்தித்துறை வீதி, |
| ஆஸ்பத்திரி வீதி, | நல்லூர், |
| யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம். |

[சி/3632]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கை

# கிளிநொச்சியிலிருந்து தெற்கே?

## அருத்து வரும் வாரங்களில் ஆரம்பமாகலாம்

கொழும்பு, மே 3

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கை ஆரம்பித்து ஓராண்டைப் பூர்த்தி செய்யும் எதிர்வரும் 13 ஆம் திகதி அல்லது அந்த வாரத்தில் கிளிநொச்சியில் இருந்து தெற்கு நோக்கி இராணுவ நடவடிக்கை ஆரம்பிககப்படலாம் என்று ''ராவய'' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்கும் ஊடாக பாதை ஒன்றைத் திறப்பதற்காக கடந்த வருடம் மே 13 ஆம் திகதி இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

சுமார் ஓராண்டு பூர்த்தியாகும் நிலையில் மாங்குளத்துக்கு அண்மை வரையே படையினர் முன்னேற முடிந்தது. மாங்குளம் நகரைக் கைப்பற்ற 4 மாதங்களாக முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதும் அது கைகூடவில்லை. இதன் காரணமாக கிளிநொச்சியில் இருந்து மாங்குளம் நோக்கி நடவடிக்கை ஆரம்பிக்கப்படலாம் என்று இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்— என்று 'ராவய' மேலும் தெரிவித்தது. (உ-3)

## கைதடியில் வடிசாலை அமைப்பதற்கு ஏற்பாடு

அரியாலை, மே 3

கைதடியில் வடிசாலை ஒன்றை அமைப்பதற்கு தென்மராட்சி பனை தென்னைவள அபிவிருத்தி கொத்தணி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தற்போது வறணியில் இருக்கும் வடிசாலை இயங்காமல் செயலிழந்து இருப்பதால் அதனை கைதடிப் பகுதிக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தென்மராட்சி பகுதியில் சேகரிக்கப்படும் கள் விரயமாகாமல் அவற்றைத் தேக்கி பனஞ் சாரயமாக்கும் பொருட்டே இவ் வடிசாலையைக் கைதடிப் பகுதியில் நிறுவுவதற்கு பனை தென்னை வள அபிவிருத்தி கொத்தணி ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. (ஐ-17)

## பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியை திருத்துவதற்கு 6 லட்சம் ரூபா

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் சேதமடைந்த வகுப்பறைகளைப் புனரமைப்புச் செய்வதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் 6 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த யுத்தகால அனர்த்தங்களின் போது இக் கல்லூரிக் கட்டடங்கள் பலத்த சேதமடைந்தன.

ஜன்னல்கள், கதவுகள் மற்றும் தளபாடங்கள் காணாமல் போய்விட்டதாக கல்லூரி அதிபர் செல்வி பொ. கந்தசாமி தெரிவித்தார். (இ-135-15)

## நீரிறைக்கும் இயந்திரம் வதிரியில் திருட்டு

நெல்லியடி, மே 3

வதிரிப் பகுதியில் இரவு வேளைகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

கடந்த வாரம் வதிரி கதிர்காம கோயிலடிப் பகுதியிலுள்ள ஒரு வீட்டிலிருந்து சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான நீரிறைக்கும் இயந்திரம் திருடப்பட்டுள்ளது.

இதேவேளை — கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவும் இதே பகுதியிலுள்ள ஒரு வீட்டிலுள்ள நீரிறைக்கும் இயந்திரத்தின் உதிரிப் பாகங்கள் திருடர்களினால் கழற்றி எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இத்திருட்டுக்கள் சம்பந்தமாக, நெல்லியடி பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-109-173)

## படையினரிடம் இருந்து காரை பெற்றுத் தருமாறு முறைப்பாடு

யாழ்ப்பாணம், மே 3

படையினரால் எடுத்துச் செல்லப்பட்ட தனது ஒஸ்டின் கேம்பிரிட்ஜ் ரக காரை மீளப்பெற உதவுமாறு சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த பொன்னம்பலம் அமிர்தலிங்கம் என்பவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய செயலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

எனது மகன் அ. கலைவண்ணன் (வயது-21) மார்ச் 19 ஆம் திகதி எனது காரை ஓட்டிச் சென்றபோது அவரைக் கைது செய்ததுடன் காரையும் எடுத்துச் சென்றனர்.

மகன் காங்கேசன்துறை தடுப்பு முகாமில் உள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. ஆனால் கார் எங்கு வைக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல் இதுவரையும் கிடைக்கவில்லை.

இப்படி அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (இ-5)

## நவாலி விவசாயிகளுக்கு முன்னுரிமைகேட்டு கடிதம்

வலி தென்மேற்கு, மே 3

''சீடா'' உதவித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுவரும் நீர் இறைக்கும் இயந்திரம் நவாலி விவசாயிகள் சம்மேளனத்திற்கும் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு கோரும் கடிதத்தை நவாலி விவசாயிகள் சம்மேளன செயலாளர், உடுவில் கமநலகேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகஸ்தருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

சிறுதானியம்- மற்றும் மரவள்ளி- பொன்னாங்காணி போன்றவற்றைச் செய்யும் 44 விவசாயிகள் இதற்கு விண்ணப்பித்துள்ளனர்.

எனவேஇவ் விவசாயிகளின் கோரிக்கைகளை கருத்திற் கொண்டுஅடுத்த தவணைக்கு நீர் இறைக்கும் இயந்திரம் ஒதுக்கப்படும் போது நவாலி விவசாயிகள் சம்மேளனத்திற்கு முன்னுரிமை கொடுக்குமாறு கடிதத்தில் கோரப்பட்டுள்ளதாக [illegible] செயலாளர் தெரிவித்துள்ளார். (இ-185-15)

## சேக்கிழார் கழகம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மே 3

சேக்கிழார் கழகத்தை மீண்டும் புனரமைக்க வேண்டுமென்ற சேவை உணர்வு கொண்ட இளைஞர்களின் ஆர்வத்தால் நேற்று முன்தினம் நல்லை ஆதீனத்தில், ஆதீன முதல்வரின் ஆசியுடன் சேக்கிழார் கழகம் மீண்டும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வி. செந்தில் குமரன்தலைமையில் தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் ''மக்கள் சேவையே என்றும் எமது சேவை'' என உறுதியெடுத்துச் செயற்படத் தொடங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் முன்பு சிறந்து விளங்கிய இக்கழகம் நாட்டுச் சூழ் நிலை காரணமாக நீண்டகாலம் செயலிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-8)

## கோழி திருட்டு அம்பலம்

சுழிபுரம், மே 3

சுழிபுரம் பகுதியில் நடைபெற்ற பல திருட்டுச் சம்பவங்களின் சூத்திரதாரிகள் சுழிபுரம் காளுவனில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரின் விசாரணையால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் நடைபெற்ற கோழித் திருட்டு சம்பந்தமான விசாரணையில் கோழி திருடியவரிடம் இருந்து கோழிகள் சில மீட்கப்பட்டுள்ளன. இராணுவத்தினர் தொடர்ந்து சம்பந்தப்பட்டவரை விசாரணை செய்து வருகின்றனர்.

சுழிபுரம் பகுதியில் இராணுவம் தினமும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது. (ஐ-28)

## வத்திராயனில் குடியேற அனுமதி

தென்மராட்சி, மே 3

வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியைச் சேர்ந்த 25 குடும்பங்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற அனுமதிவழங்கப்பட்டுள்ளது.

இப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் தற்போது தாளையடி, செம்பியன் பற்று, மருதங்கேணி ஆகிய இடங்களில் உள்ள உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். (ஐ-111)

## திருநிலைப் படுத்தல்

வடமராட்சி, மே 3

யாழ். கொய்யத் தோட்டத்தைச் சேர்ந்த அருட் சகோதரன் எமில்ராஜேஸ்வரன் போல் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். ஆயர் பேரருட்திரு. தோமஸ்சவுந்தர நாயகம் ஆண்டகையால் குருவாக திருநிலைப்படுத்தப்படவுள்ளார்.

யாழ். மரியன்னை பேராலயத்தில் இத்திரு நிலைப் படுத்தும் வைபவம் இடம் பெறும். (ஐ-173)



## பராமரிப்பற்ற வளவுகளில் சுத்திகரிப்புப் பணி

அரியாலை, மே 3

மலேரியா நோய் பரவுவதைத் தடுக்கும் முகமாக யாழ். மாநகரப் பகுதியில் பராமரிப்பின்றி உள்ள தனியார் வளவுகளைத் துப்புரவு செய்யும் பணியை யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினர் ஆரம்பித்துள்ளனர்.

பராமரிப்பின்றி இருக்கும் வளவுகள் மற்றும் தனியார் காணிகளில் அதிகளவில் பற்றைகள் வளர்ந்திருப்பதால் இவற்றை அழித்து துப்புரவு செய்யும் பணியில் மாநகர சுகாதாரத் தொழிலாளர்கள் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

இதற்கென யாழ். மாநகர சுகாதாரப் பிரிவு அமைய அடிப்படையில் தொழிலாளர்களை நியமித்துள்ளது.

முதற்கட்டமாக நாவாந்துறை, குருநகர், கொழும்புத்துறை பகுதிகளில் இப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

## 'விருட்சம்' சஞ்சிகை

வடமராட்சி, மே 3

கிளிநொச்சி- முல்லைத்தீவு மறைக் கோட்டத்தினால் ''விருட்சம்'' என்ற பெயரில் புதிய மாத இதழ் ஒன்று கத்தோலிக்க செய்திப்பத்திரிகையாக கடந்த ஈஸ்ரர் பண்டிகை முதல் வெளியிடப்பட்டு வருகிறது.

(ஐ-173-17)

## மேஜர் ஜெனரல்களாக ஐவருக்குப் பதவி உயர்வு

கொழும்பு, மே 3

வடக்கு — கிழக்கு யுத்த முனையில் பணிபுரியும் நான்கு பிரிகேடியர்கள் உட்பட ஐந்து பிரிகேடியர்கள் மேஜர் ஜெனரல்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இராணுவத்தளபதி றொஹான் தளுவத்த இந்தப் பதவி உயர்வுகளை வழங்கியுள்ளார் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரிகேடியர்களான சாந்த கொட்டேகொட, சூல செனவிரத்தின, சரத் பொன்சேகா, நிஹால் ஜெயக்கொடி ஆகியோரே யுத்த முனையில் பணியாற்றி பதவி உயர்வு பெற்றவர்களாவர்.

இராணுவத்தலைமையகத்தில் பணியாற்றிய அன்ரன் விஜேந்திரனும் பதவி உயர்வு பெற்ற பிரிகேடியவராவார் (இ-3)

## குடும்பத்திட்ட பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், மே 3

சுகாதார வெளிக்களப் பணியாளர்களுக்கான குடும்பதிட்ட முறைகள் சம்பந்தமான அண்மைக்கால அறிவுவிருத்தி பயிற்சிநெறி ஒன்று யாழ். மாநகர சபை சுகாதாரப் பிரிவினரால் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம், 13ஆம் திகதிகளில் இப்பயிற்சி நெறி யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும்

ஐ. நா. சனத்தொகை நிதியத்தின் உதவியுடன் நகர்ப்புற அடிப்படை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைபெறும் இப்பயிற்சி நெறியில் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியன், டாக்டர் எஸ். தெய்வேந்திரம் உட்பட சுகாதாரப் பகுதியின் அதிகாரிகள் பலர் விரிவுரைகளை நிகழ்த்துவார்கள். (இ-5)

## புதிய பஸ் சேவை

யாழ்ப்பாணத்திலிருந்து பெரிய விளானுக்கு மல்லாகம், அளவெட்டி ஊடாக புதிய பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அளவெட்டி, மல்லாகம் பகுதிகளில் மக்கள் மீளக் குடியேறியதைத்தொடர்ந்து அவர்களின் போக்குவரத்து வசதி கருதி இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஐ-173)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 07 — 12 — 1926

இறைவன் அடியில்: 14 — 05 — 1997

திருமதி

**புவனேஸ்வரி அரியதுரை**

திதி; 03 — 05 — 1998

பாங்கான கலைகள் பல தெரிந்த
பாசமிகு அம்மாவே!
நாம் காணும் கோலங்கள் நீ காண
நானிலத்தில் வாராயோ!
தேன் சிந்தும் வார்த்தைகளால்
தேற்றிடும் உன் தாய்மை எங்கே?
வான் உயர்ந்த நினைவுகளால்
வாழ்த்துகிறோம் உன் ஆத்மாவினை,

என்றும் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்,
உற்றார், உறவினர்.

239, ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை.

(55661)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கல்வளை சண்டிலிப்பாயில் நல்ல விளைச்சல் தரும் வயற் காணி 15½ பரப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சு. தர்மராசா (ஆச்சா), பகவான்ஸ்ரோர்ஸ், உடுவில்வீதி, மானிப்பாய். [55704]

இளம் சோடி வான்கோழிகள், மணித்தாரா, கினிக்கோழி, கறுப்புநிற பொமேரியன் நாயும் அதன் குட்டிகளும் (45 நாள் பூர்த்தியானது), இங்கிலண்ட் ஜென்ஸ் றலி ஸ்போட்ஸ் சைக்கிளும் விற்பனைக்கு உண்டு. லிங்கமூர்த்தி மயூரன், நவாலி அரசடி, மானிப்பாய். (மகாவித்தியாலயம் அருகில்). [55695]

ஒரு மாதம் நிரம்பிய பூச்சி நீக்கிய அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. வாவு, டச்சு வீதி, மானிப்பாய். [55678]

பிறிமா ஒரு நாள் பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. விலை ரூபா 20 மட்டுமே ''மல்லிகாபதி'' மார்க்கற், கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். [55397]

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையில் உள்ள கல் வீடு (வளவு 2 பரப்பு 16குழி) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 732, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [55369]

## இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி (கல் பேட்ஸ்) விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [55702]

## TO LET

Houses Availeble for Government or Non Governmental Organizations To Let, Down Temple Road Closer to Hospi-tal Road Jaffna. Contact: No 48 Temple Road. Jaffna [55703]

## தவறிவிட்டது

தனபாலசிங்கம் செல்வமுரளி ஆகிய எனது பல்கலைக்கழக, தேசிய, விசேட அடையாள அட்டைகள் அடங்கிய பேர்ஸ் சங்கானைக்கும், வடலியடைப்புக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து S. சிவாஞ்சன் 'நிம்மதி' தேவாலய வீதி, சங்கானை அல்லது பாதுகாப்பு அலுவலகம், யாழ். பல்கலைக்கழகம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [55688]

## ஆங்கிலம் தபால் மூலம்

G. C E மாணவர்கள் திறமைச்சித்தி பெறவும் ஏனையோர் திறம்பட எழுதப் பேசவும் ஆங்கிலம் தபால் மூலம் பயிற்றப்படுகின்றது. பெறுமதி வாய்ந்த சான்றிதழும் உண்டு. முத்திரையொட்டி சுயவிலாசமிட்ட நீள உறையுடன் எழுதவும்

GERARD JOSEPH
(Director- Training)
LAMPS Ltd.
(தொழில் வாய்ப்புகள் செய்து கொடுக்கும் நிறுவனம்)
76, Maha Veethiya
(Grand Street)
Negombo.
(55352)

# ஐந்தாம் ஆண்டு நினைவினில்



அன்னை மடியில்: 01 — 04 — 1967

அரன் அடியில்: 29 — 04 — 1993

செல்வி
## சிவானந்தி சரவணமுத்து

திதி: 03 - 05 - 1998

செங்கமலப் போதுநிகர் மங்கை
சிவானந்திப் பேர்சுமந்த நங்கை
எங்கள் மனம் நிறைந்திருப்பாள் என்றும்
இந்த ஐந்தாண்டுக் காலமது சென்றும்.

அம்மா, ஐயா, பெரியண்ணா,
சின்னண்ணா, தம்பி, தங்கச்சி.

சாஸ்திரியார் ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை. (சி/ 3626]

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் ஆரம்பகால அங்கத்தவராகவும், நிர்வாக உறுப்பினராகவும் இருந்து சங்க வளர்ச்சிக்கு அரும்பெரும் பணியாற்றிய

திருமதி
## பரமேஸ்வரி செல்வரத்தினம்

அவர்கள் 30 - 04 - 1998 இல் கொழும்பில் இறைபதம் எய்திய செய்தி கேட்டு ஆறாத் துயரம் அடைவதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர்
ஐக்கிய நாணய சங்கம்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (55672)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி சரோஜினி மனோகரன்**
அவர்களின் பாசமிகு தாயார்

## திருமதி கத்தரீன் தங்கமணி துரைரட்ணம்

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவர்தம் குடும்பத்தவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யாழ். சென். யேம்ஸ் மகளிர் பாடசாலை.
(சி/3628)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 22 — 10 — 1921

மறைவு: 14 — 05 — 1997

## திருமதி கந்தையா தவமணி

அன்பின் இலக்கணமாய், அமைதியின் உறைவிடமாய், குடும்பத்தின் ஒளி விளக்காய் நின்று பாசமும், பரிவும் காட்டி வளர்த்து எங்களை வாழ வைத்து விட்டு மீளாப் பயணம் சென்ற எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் நினைவால் நாங்களெல்லாம், மின்னலென ஓராண்டு ஓடி மறைந்தாலும் ஆறாது எம்துயரம் மாறாது உங்கள் நினைவு!

குடும்பத்தினர்.

12/23, கன்னாதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (55669)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லியோ அங்கத்தவருக்கு

பிராந்தியம் 8 இல் செயற்படும் லயன்ஸ் கழகங்கள், லியோ கழக உறுப்பினர்களுக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 14 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள லியோ கருத்தரங்கில் சர்வதேச சங்கம் வழங்கும் லியோ சின்னம், சான்றிதழ் மற்றும் ஆவணங்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளன.

லியோ கழக அங்கத்தவர்கள் எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னதாக தங்கள் கழக லியோ ஆலோசகர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு மாவட்டம் ''306 பி'' இன் லியோ தலைவர் லயன் பி. தவபாலன் கேட்டுள்ளார். (ஐ-8)

# கண்ணீர் அஞ்சலி

இரண்டு வருடங்களுக்கு மேலாக நல்லூர் ப.நோ.கூ. சங்கத்தின் தலைவராக இருந்து சங்கத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்த

## திரு. சுந்தரம்பிள்ளை இராசநாயகம்

அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரமடைகின்றோம். அன்னாரின் மறைவு பொதுநல சேவையில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு பேரிழப்பாகும்.

அன்னாரின் மறைவால் துயருறும் மனைவி, மக்கள், உறவினர் அனைவரின் துயரத்திலும் நாம் பங்கு கொள்வதுடன் அவர் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்கின்றோம்.

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம்,
கிளை - நல்லூர் ப.நோ.கூ. சங்கம்.
(55701)

# கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய உபஅதிபர்
**செல்வி சந்திராதேவி நடராசா**

காலமானதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

யா / கோப்பாய் நாவலர் வித்தியாலய
கல்விச் சமுகம்.
(55700)

தரமான புளொக் தயாரிப்பதற்கு
நாடவேண்டிய இடம்



## அருண்
## புளொக் தயாரிப்பாளர்

அத்துடன்
குறைந்த கட்டணத்தில்
தரமான முறையில்
○ போட்டோ பிரதிகள்
○ அடையாள அட்டை
கவரிடுதல் (LAMINATION)

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## செல்வி இந்திராணி சின்னத்தம்பி

எங்கள் அன்புச் சகோதரி நோய்வாய்ப்பட்ட வேளையில் அவருக்கு சிகிச்சையளித்த வைத்தியர்கள், அவரைப் பராமரித்த தாதிய உத்தியோகத்தர்கள், இறுதிக்கிரிகையில் பங்கு கொண்டு எமக்கு ஆறுதல் அளித்த அயலவர்கள் மற்றும் உறவினர், நண்பர்கள் மற்றும் இன்று நடைபெறும் அந்தியேட்டி சபீண்டிகரணக் கிரியைகளில் கலந்து சிறப்பிக்கும் உற்றார். உறவினர், நண்பர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகள்.

திருமதி செல்வராணி வெற்றி வேலாயுதம்,
மற்றும்
சகோதர சகோதரிகள்.

310, கச்சேரி நல்லூர்றோட்,
யாழ்ப்பாணம். (55670)

# உதயன்

## சுய சோதனை

யாழ்ப்பாணத்தில்நேற்று முன்தினம் நடத்தப்பட்ட மே தினக் கூட்டங்களில், மக்கள் மிக மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே பங்குபற்றினர்.

இலங்கையில் பொதுவாகவே, மே தினக் கூட்டங்கள் தொழிற்சங்கங்கள்சார்பாகத் தனித்து நடைபெறுவது மிகமிகக் குறைவு. தொழிற் சங்கங்கள் ஏதோ ஒருவகையில் அரசியல் கட்சிகளைச் சார்ந்து நிற்பதால் மே தின விழாக்களும் அரசியற் கட்சிகளின் வட்டத்துக்குள்ளேயே மட்டுப்படுத்தப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பிரதான மே தின விழாக்களும் அந்த வகை சார்ந்தவையே. சரியாகச் சொல்வதானால் அரசியல் கட்சிகளுக்கு மக்கள் மத்தியில் உள்ள ஆதரவை - பலத்தை- அளந்து பார்ப்பவையாகவே மே தின விழாக்கள் அமைவதுண்டு.

அந்த நோக்கில் பார்ப்பின் இங்கு இயங்கும் அரசியல் கட்சிகளுக்கு மக்களிடையே — தொழிலாளர்களிடையே— திருப்தி தரக்கூடிய ஆதரவில்லை என்பது வெள்ளிக்கிழமை வெகு பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது.

மிகவும் உண்மையைச் சொல்வதானால் —

சந்திரிகா அரசாங்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாகக் கையாளும் போக்கினாலும் அதன் உள்நோக்கினாலும் —

யாழ்ப்பாணத்தில் செயற்படும் அரசியல் கட்சிகள் மூலம் தீர்வோ அன்றி அமைதியோ கிட்டாது என்பதனை இப்பகுதி மக்கள் உணர்ந்துள்ளார்கள் — என்பதே யதார்த்தம்.

மக்கள் இத்தகைய முடிவுக்கு வருவதற்குத் தகுந்த காரணம் இல்லாமல் இல்லை. இந்தக் கட்சிகள் மக்கள் நலனை முன்னிறுத்தி ஒரே அணியில் இயங்குவதற்கு — பொதுத் திட்டம் ஒன்றின் கீழ்செயற்படுவதற்கு — உள்ளாந்தரமாக முன்வரவில்லை.

ஆகையால், மக்களின் மனம் பளிங்கு போலத் தெரிந்த பின்னரும், சம்பந்தப்பட்ட கட்சிகள் தம்மைச் சுய சோதனை செய்யத் தவறுமேயானால் — ஒன்றுபட்டுச் செயற்பட முன் வரவில்லையானால்— தொடர்ந்தும் சிறுபிள்ளை வேளாண்மை என்ற நிலையே மிஞ்சும்.

மேலும் யாழ். மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தானும் தீர்க்கப்பட்டதாக இல்லை. மீளக் குடியேறிய கடந்த இரண்டு வருடங்களில், முன்னர் தொழில் இழந்த எத்தனை பேருக்கு மீள வேலை வாய்ப்புக் கிடைத்திருக்கிறது? குடும்பங்களில் பொறுப்புகளைச் சுமந்து நிற்கும் எத்தனை இளைஞர், நங்கையருக்கு புதிதாக வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கிறது? போரின் போது அழிக்கப்பட்ட எத்தனை தொழிற்சாலைகள் மீள இயக்கப்பட்டுள்ளன?

யாழ்ப்பாணம் இதோ மீண்டும் சொர்க்கபுரியாகிறது— என்று வெளி உலகத்துக்குக் காட்டுவதில் அரசு வெற்றி கண்டு வருகிறது. எல்லாமே— ஒய்யாரக்கொண்டையிலே தாழம் பூவாம்; உள்ளே இருப்பதுவோ ஈரும் பேனாம் என்ற நிலைதான்!

இந்த நிலையையாவது நீக்க இங்குள்ள அரசியல் கட்சிகள் பெரிய அளவில் முனையக்கூடாதா?

# துன்பங்கள் என்றும் வீணாவதில்லை; அவை மீட்பின் படிக்கட்டுகளே

லூக்கா நற்செய்தியில் மலைப்பொழிவின் தொகுப்பிலிருந்து ஒரு பகுதியானது இங்கு வாசகமாகத் தரப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் பேருரைகளுக்குள்ளே இது சிறப்பு மிக்கதும் தனித்தன்மை வாய்ந்ததுமாகத் திகழ்கின்றது. மனித வாழ்வின் அவலங்களையும், அதற்கான தெளிவையும் காட்டும் கண்ணாடியாகத் திகழ்கின்றது. இது எமது வாழ்வுக்குச் சவாலாகவும், உலகின் மதிப்பீடுகளுக்கு முரணானது போலவும் தோன்றுகின்றது.

லூக்கா மற்ற நற்செய்தியாளரைவிட மலைப்பொழிவைக் கையாளும் போது 'இப்போது' என்று நிகழ் கால மரபிலே அதை நிரல்படுத்துவதைக் காணக் கூடியதாக உள்ளது. லூக்கா புற இனக் கிறிஸ்தவர்களுக்காக இந்த நற்செய்தியை யாத்தார். கி. பி. முதலாம் நூற்றாண்டிலே, உரோமையர் ஆட்சியிலே எங்கும் வேதகலாபனைகள், கிறிஸ்துவைப் பின்பற்றியவர்கள் கொடூரமாக வதைக்கப்பட்டார்கள். இந்த வேளையிலே புற இனக் கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் தளம்பாது இருக்க, தன் நோக்கிற்கு ஏற்ப இந்த மலைப் பொழிவைத் தருகின்றார்,

ஆகவேதான் இப்பொழுது பட்டினியாய் இருப்போரே, நீங்கள் பேறுபெற்றோர்; ஏனெனில் நிறைவு பெறுவீர்கள். இப்பொழுது அழுது கொண்டிருப்போரே, நீங்கள் பேறுபெற்றோர்; ஏனெனில்

**ம. யேசுதாசன்**

நீங்கள் சிரித்து மகிழ்வீர்கள் என்கிறார். இப்படித் துன்புறும் அவர்களுக்கு ஆறுதல் கூறி, அவர்கள் இறைவனில் நம்பிக்கையோடு வாழ உற்சாகம் ஊட்டுகின்றார்.

'இப்பொழுது' என்ற லூக்காவின் சொல்லாட்சி இன்று நமக்கு மிகப் பொருத்தமே. மனித வரலாறு தோன்றிய காலந்தொட்டு, அவன் பாவ அடிமைத்தளையில் வீழ்ந்த நாள் தொட்டு துன்பம், துயரம், பசி, பிணி, மூப்பு முதலான அவலங்கள் அவன் வாழ்வில் தொடர்ந்த வண்மாக இருக்கின்றன. சிரிக்கப் பிறந்த மனிதனின் வாழ்வில் 'அழுகை' என்ற அவலம் ஏன் தொடர்கிறது........?

கேள்வி பிறந்தது அன்று, பதில் கிடைக்கிறது இயேசுவின் இந்த மலைப் பொழிவில்.

அழுகைக்குக் காரணமான துன்பம் பல வடிவங்களில் இன்று எம்மைத்தாக்குகின்றது. ஏழ்மையால் வரும் துன்பம், பசியால் வரும் துன்பம், போரின் கொடிய விளைவுகளால் வரும் துன்பம், இயேசுவின் மதிப்பீடுகளைப் பின்பற்றுவதால் வரும் துன்பம் என்று பல

**ஞாயிறு நற்பிரசாதம்**

வடிவங்களில் இது எம்மைத் தாக்குகின்றது,

துன்பமே இல்லாத உலகம் இருக்கக் கூடாதா என்று மனிதன் ஏங்குகிறான். 'எங்கே நிம்மதி? எங்கே நிம்மதி? அங்கே எனக்கோர் இடம் வேண்டும்' என மனிதன் ஏங்குகின்றான்.

துன்பமற்ற ஒரு நிலையைத் தர கிறிஸ்து இங்கு வரவில்லை. துன்பத்தின் வழியாகவே உலகை மீட்க வந்தார். துன்பங்களின் பொருள் சொல்லி அதன் வழியாக வரும் இன்ப நிலையைக் காட்ட வந்தார். பாடுகள் இன்றிப் பட்டமில்லை. துன்பமின்றி இன்பமில்லை. ஆகவே கிறிஸ்துவும் துன்புறும் ஊழியனாகவே உலகிற்கு வந்தார். (இசை. 53:3)

எனவே இந்த உலகில் நாம் அனுபவிக்கும் துன்பங்கள் வீணாகப் போவதில்லை. அவை எமக்கும் மற்றவருக்கும் மீட்பின் படிக்கட்டுகளாகின்றன. புனித சின்னத்திரேசம்மாள் இந்த உலகில் எளிதாக ஒன்றும் சதித்து விடவில்லை. கடல் கடந்து பல நாடுகளுக்குச் சென்று மறையைப் போதிக்கவில்லை. ஆனால் அவள் வேதபோதக நாடுகளின் காவலியாகத் திகழ்கின்றாள். காரணம் அவள் தனது துன்பங்களை மகிழ்வோடு ஏற்று பாவிகள் மனம்மாற ஒப்புக்கொடுத்தாள் அதன் காரணமாகப் பலர் இரட்சிக்கப்பட்டார்கள். மனிதன் விரும்பியோ, விரும்பாமலோ துன்பங்கள் வரத்தான் செய்யும். இவைகளை நாம் மீட்பாக மாற்றுவதிலேயே எமது மகிழ்வு தங்கியுள்ளது. ஆகவே இப்பொழுது 'அழுபவர்களே' என்ற வார்த்தை எமக்கும் பொருந்தும். துன்பம் கசப்பானதுதான். ஆனால் விலைமதிப்பற்றது இறைவன் முன்னிலையில். ★

# சட்டபூர்வமற்ற வருடாந்த வரி மதிப்பீட்டு முறையை ரத்துச் செய்க!

## மாநகர முதல்வரிடம் கோரிக்கை

தற்பொழுது அமுல் செய்யப்படும் சட்டபூர்வமற்ற வருடாந்த வரி மதிப்பீட்டுப் பெறுமதிகளை ரத்துச் செய்து கடந்த 1992 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்த வருடாந்தப் பெறுமதியின் அடிப்படையில் ஆதன வரியை விதித்து அறவிடுமாறு வேண்டுகின்றோம். இதன் மூலம் வரியிறுப்பாளர்களுக்கு நியாயம் வழங்கப்படுவதுடன் ஆறுதலும் கிடைக்கும்.

வடமாநில ஓய்வூதியர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் சி. வீ. கே. சிவஞானம் யாழ். மாநகர முதல்வர் திருமதி சறோஜினி யோகேஸ்வரனுக்கு அனுப்பி வைத்துள்ள சடிதம் ஒன்றில் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் வருமாறு:-

★ புதிய வரி மதிப்பீடு சட்டத்திற்கு முரணானது என நாம் ஆதாரபூர்வமாக சுட்டிக்காட்டிய போதும், அவை எதேச்சாதிகாரமாக நிராகரிக்கப்பட்டன. அதன் காரணமாக தற்பொழுது சட்ட பூர்வமற்ற வருடாந்த பெறுமதியேஅமுலில்உள்ளது.

★ இதை மறைப்பதற்கு குறைந்த வருடாந்த மதிப்பீட்டில் 18 – 20 வீதமாகவிருந்த ஆதன வரி 1997 இல் இருந்த புதிய அதிகரித்த வருடாந்த மதிப்பீட்டில் 12 வீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது மக்களிடமிருந்து அதேயளவுக்கு அண்மித்தான வரியே அறவிடப்படுவதாக காட்டுவதற்கு செய்யப்பட்ட நடவடிக்கையாகும். ஆயினும் நிலைமை அவ்வாறில்லை. அதிகரித்த வரி எதுவித புதிய அல்லது அபிவிருத்தி செய்யப்பட்ட சேவைகளை வழங்கப்படாத நிலையிலும் அறவிடப்படுகிறது. எந்தவொரு ஆதனத்திற்கும் 1992 –க்கு முன்பு விதித்த வரியையும், 1997 ஆம் ஆண்டுக்கு நிர்ணயித்த வரியையும் ஒப்பிட்டால் இது தெளிவாகும்.

★ 247 ஆம் பிரிவின் கீழான வியாபார உத்தரவும் பத்திரக் கட்டணங்களும் இந்த அதிகரித்த வருடாந்த பெறுமதியின் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்பட்டு அறவிடப்படுகிறது. இதுவும் நியாயமற்றதாகும்.

★ ஊழியர்களின் அதிகரித்த சம்பளங்களைச் செலுத்த ஆதன வரி வருமானம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற தவறான கருத்தும், வாதமும் முன்வைக்கப்படுவதாகவும் தெரிய வருகிறது. உள்ளூராட்சி மன்றங்களின் சம்பளங்களை இப்பொழுது மாகாணசபையே முழுமையாக மீளளித்து வருவதால் இந்த வாதம் தவறாகும்.

## பாக். படைகள் தாக்குதல்!

# ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மயிரிழையில் தப்பினார்

ஜம்மு காஷ்மீரின் சியாச் சென் மலைப் பிரதேசத்தில் உள்ள இந்தியப் பாதுகாப்பு நிலைகளைப் பார்வையிடச் சென்றிருந்த பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பாகிஸ்தானியப் படையினரின் பீரங்கித் தாக்குதலில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பினார்.

இத்தாக்குதலில் இந்தியப் படை வீரர் ஒருவர் கொல்லப்பட்டார்.

சியாச்சென் மலைப் பகுதிக்குச் சென்று தரையிறங்கிய உடனேயே பாகிஸ்தான் படைகள் தாக்குதல் நடத்தத் தொடங்கியதாக அமைச்சர் பெர்னாண்டஸ் பின்னர் ஸ்ரீநகரில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

காஷ்மீர் பிரிவினைவாதிகளுடனும், தீவிரவாத அமைப்புகளுடனும் பேச்சு நடத்த இந்திய அரசு தயாராக இருப்பதாக அமைச்சர் பெர்னாண்டஸ் அழைப்பு விடுத்துள்ளார். (ஐ-ரீ)

# சனியை நோக்கிச் செல்லும் "காசினி"!

சனிக் கிரகத்தை ஆராய்வதற்காக அமெரிக்காவில் இருந்து அனுப்பப்பட்ட ''காசினி'' விண்கலம் தற்போது 1லட்சத்து 40 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்தைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது.

இந்த விண்கலம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை வெள்ளிக் கிரகத்துக்கு மிக அருகில் கடந்து சென்றது.

இது திட்டமிட்டபடி உரிய நேரத்தில் சனிக் கிரகத்தைச் சென்றடையும் [illegible] அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையத்து [illegible] மேலாளர் ரோவால்ட் ட்ராபார் தெரிவித்தார்.

இந்த விண்கலம் கடந்த ஒக்ரோபர் மாதம் செலுத்தப்பட்டது. 7 ஆண்டுகள் விண்ணில் அது வலம் வரும். சனிக்கிரகத்தில் மட்டும் 4 ஆண்டுகள் ஆராய்ச்சி செய்யும்.

சனிக் கிரகத்தில் உள்ள வளையங்கள், துணைக் கோள்கள் குறித்து 'காசினி' விண்கலம் ஆராயும். சனியின் மிகப் பெரிய துணைக் கோளான ரைட்டானில் பூமியைப் [illegible] வாயு பெருமளவு படர்ந்துள்ளமை குறித்தும் ஆராயப்படும். (ஐ-10)

## சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், மே 3

யாழ். வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய வருடாந்தமஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் ஸ்ரீகாமாட்சி சன சமூக நிலையம் மனனப்போட்டி, சமய அறிவுப்போட்டி என்பனவற்றை நடத்தவுள்ளது.

ஆண்டு 1, 2, 3 மாணவர்களிடையே மனனப்போட்டியும் ஆண்டு 4 முதல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு சமய அறிவுப் போட்டியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப்போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவங்களை ஆலயத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை வரை பெற்றுக் கொள்ளலாம் என்று நிலையச் செயலாளர் தெரிவித்துள்ளார். போட்டிகள் பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் (ஐ)

## பாலர் பாடசாலை

தென்மராட்சி, மே 3

இத்தாவில் கிராம சபை அலுவலக கட்டடத்தில் இயங்கி வந்த பாலர் பாடசாலை யாழ்ப்பாணம் வை. எம். சீ. ஏ. நிறுவனத்தினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

இப் பாலர் பாடசாலை இதுவரை இப் பகுதி படையணியின் உதவியுடன் நடத்தப்பட்டு வந்தது. (ஐ-117)

**உதயவாக்கு**

ஆடம்பர வாழ்க்கை மிகவும் அடிமைத் தனமானது; உழைப்பது மிகவும் கௌரவத்துக்குரியது.

-மகா அலெக்சாண்டர்

## நாளை

சித்திரை - 21

திங்கட்கிழமை

திதி: அட்டமி

முற்பகல் 8.45 வரை.

நட்சத்திரம்: ஆயிலியம்

பிற்பகல்: 5. 00 வரை.

சுபநேரம்: 11.56 –1.26

ராகுகாலம்: 7.26-8.56

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் முகம்



உடுப்பிட்டி இமையாணன்கிராமத்தில் பிறந்து மானிப்பாயில் வசித்து வரும் இளையவன் வல்லிபுரம் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக யாழ். மாவட்ட நீதிவான் பகில் க. கேசவன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

இமையாணன் கிராமத்தில் ஒரு பாடசாலையை தோற்றுவித்து, அது மகா வித்தியாலயமாக வளர்வதற்கு ஆரம்ப கர்த்தாவாக இவர் விளங்கியுள்ளார். இமையாணன் கலைமகள் சனசமூக நிலையம், ஐக்கிய விளையாட்டுக் கழகம் போன்றவற்றின் வளர்ச்சிக்காகவும், அயராது உழைத்து வரும் இவர் அண்மையில் இங்கு உபஅஞ்சல் அலுவலகம், மத்திய மருந்தகம், மகப்பேற்று மருத்துவமனை ஆரம்பமாக அரசின் அனுமதியைப் பெற்றுக் கொடுத்துள்ளார். இக்கிராமத்தில் பிரதான வீதி தோன்றவும், குடிதண்ணீர் கிணறுகள், விவசாயக்கிணறுகள் அமைக்கவும் காரணமாக விளங்கினார்.

மானிப்பாய் வடக்கு வளர்மதி சனசமூக நிலைய போஷகராகவும், விவசாய சம்மேளன செயலாளராகவும், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராகவும் தற்பொது விளங்குகிறார்.

1960 முதல் 1993 வரையான காலப் பகுதியில் ஆசிரியராக 10 வருட சேவையும் அதிபராக 20 வருட சேவைகளுமாற்றி உள்ளார்.

உடுப்பிட்டி அமெரிச்க மிஷன் கல்லூரியில் கல்வி பயின்று அங்கு ஆங்கில பயிற்றப்பட்ட ஆசிரியராகவும் கடமையாற்றி 32 ஆண்டு சேவையின் பின் ஓய்வு பெற்றுள்ளார்.

(அ-152)

★ ★ ★

சிறந்த சமூக சேவையாளரான சின்னத்தம்பி செல்லத்துரை நீதி அமைச்சினால் சமாதான நீதிவானக நியமிக்கப்பட்டுள்ளார். சுன்னாகம் பல. நோ. கூ சங்கத்தின் பொதுச்சபை, காந்தி சனசமூக நிலையம் ஆகியவற்றின் உறுப்பினராகவும் தாவடி பிரசைகள் குழுத் தலைவராகவும் ஏனைய பல்வேறு பொதுத் தாபனங்களின் உறுப்பினராகவும் பதவி வகிக்கிறார். இவர் தாவடி கிராமத்தின் முன்னேற்றத்திற்காக தன்னை முழுமையாக ஈடுபடுத்தி அதன் வளர்ச்சிப் பணிகளில் முக்கிய பங்காற்றி வருகிறார்.

(அ-103)

★ ★ ★

குடிசனமதிப்புப்புள்ளி, குடிவரவு குடியகல்வுத் திணைக்களங்களில் கடந்த 38 வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றிய வடமராட்சி கரணவாய் வடக்கைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை சதாசிவம் அண்மையில் ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் கடமைபுரிந்தகாலத்தில் தாம் கடமையாற்றிய திணைக்களங்களில் உள்ள தொழிற்சங்களிலும் மற்றும் இலங்கை மன்றக் கல்லூரி, தமிழர் பண்பாட்டுக் கழகம், இந்துமாமன்றம், பாடசாலை அபிவிருத்திச்சபை, சனசமூக நிலையம், பருத்தித்துறை வைத்தியசாலை, அபிவிருத்திச்சபை ஆகியவற்றிலும் பதவிகளை வகித்துள்ளார்.

இவருடைய சேவைக்காலத்தில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தில் அங்கத்தவராகச் சேர்ந்த பொதுச் சபையில் போட்டியிட்டு பொருளாளர், பொதுச்செயலாளர், தலைவர் போன்ன் பதவிகளை வகித்ததுடன் இன்று வவுனியாவில் இக்கும் தலைமைச் செயலருக் கட்டடத்தைக் கட்டி முடிப்பதற்கு நிர்வாக சபையுடன் சேர்த்து அயராது உழைத்தவர். அரச சேவையிலுள்ள மொழிவழித் தொழிற்சங்கங்களை ஒன்று சேர்ந்து தொழிற்சங்கக் கூட்டணி உருவாதற்கும் முன்னின்று உழைத்ததுடன் சிங்கப்பூரில் நடைபெற்ற உலக தொழிலாளர் மகாநாட்டிலும் பங்குபற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-இ)

★ ★ ★

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை ஜெகதீசன் சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பிரதம கணக்காளராகப்பணியாற்றி கடந்த மார்ச் மாதத்தில் ஓய்வு பெற்றார்.

திருநெல்வேலிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பிரதம கணக்காளராக முதன் முதலில் தனது பணியை ஆரம்பித்த இவர் 1981 வரை இங்கு பணியாற்றினார்.

பின்னர் 1984 வரை கரைச்சி தெங்குப் பல நோ. கூ வில் பணியாற்றினார் 1984 பங்குனி மாதத்தில் இருந்து 1998 பங்குனி வரை சங்கானைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றார்.

ஜெகதீசன் சமயத் தொண்டுகளில் அயராத ஈடுபாடு கொண்டவர். இவர் யாழ். பரமேஸ்வராக் கல்லூரி, யாழ். தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார்.

(அ-6-30)

# சைவர்கள் பத்திரப்படுத்தி வைத்து அடிக்கடி படிக்க வேண்டிய நூல்

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் நாடறிந்த — தமிழ் கூறும் நல்லுலகறிந்த செஞ்சொற் பேச்சாளர். நாளும் ?ல் இன்னுரையால் நம் சைவம் வளர்த்து வருபவர்.

''கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்பமொழிவதாம்சொல்'' என்ற வள்ளுவனின் வாக்கிற்கிணங்கச் சொற்பொழிவாற்றும் தமிழறிஞர் சிலருள் அவர் குறிக்கத்தக்கவர்.

ஐவரை அடக்க வல்ல ஆற்றலைத் தரும்நின்பேச்சு; பொய்பகை போக்க வல்ல புத்தியைத் தரும் நின்பேச்சு; செய்வகை தெளிய வல்ல செம்மனம் தரும் நின்பேச்சு — எனக் கவிஞர் கந்தவனம் குறிப்பிடுவது முற்றிலும் உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

அவர் சொற்பொழிவாற்றாத ஆலயங்களோ, வித்தியாலயங்களோயாழ்ப்பாணத்தில்இல்லை எனலாம். இங்கு மட்டுமல்லாமல், செந்தமிழும் சிவமணமும் செறிந்துள்ள இலங்கையின்ஏனைய பிரதேசங்களிலும், இந்தியத் தமிழகம், மலேஷியா, சிங்கப்பூர், இங்கிலாந்து போன்ற இடங்களிலும் அங்குள்ள பண்பாளர்களின் அழைப்பையேற்றுச் சென்று சொற்பொழிவாற்றி அஃதெல்லாம் ஆன்மீக வளர்ச்சிக்கு உதவியுள்ளார்; தாம் பிறந்த ஈழநாட்டுக்குப் பெருமை தேடித் தந்துள்ளார்.

கிட்டத் தட்டக் கால் நூற்றாண்டின் முன்னர் மலேஷியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் அந்தக் காலத்திலேயே நூலுருப் பெற்று விட்டன. நூலின் வெளியீட்டு விழா கோலாலம்பூர் ஸ்கொற் றோட் கந்தசுவாமி கோயிற் கலா மண்டபத்தில்கோலாகலமாக நடைபெற்றது. அந்தநூலின் அருமையையும் பெருமையையும் இன்றியமையாமையையும் உணர்ந்த அன்பர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க ''தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்த நாள் அறநிதியச் சபை'யினர்அதை இப்போது மறுபிரசூரஞ்செய்துள்ளனர்.

''பத்துச் சொற் பொழிவுகள்'' என்ற இந்த நூலில் ஆலயங்களின் அற்புதங்கள், தோத்திரமும் சாத்திரமும், கச்சியப்பர் கவிநயம், சைவமும் தமிழும். சிவபுராணம், திருவைந்தெழுத்து, திருக்கைவேல், விநாயகபரத்துவம், வள்ளி திருமணம், பெரியபுராணமும் சைவசித்தாந்தமும்-ஆகிய தலைப்புக்களில் அம்மையார் ஆற்றிய சொற்பொழிவுகள் கட்டுரை உருவிற் காணப்படுகின்றன,

''மக்கட் பிறப்பினை மாண்புடையதாக்க வேண்டுமானால், சிந்தனையும் வந்தனையும் வேண்டற்பாலதாகும். என்று மனிதன் சிந்திக்கத் தொடங்கினானோ அன்றே இறைவனை வந்திக்கவும் தொடங்கி விட்டான்'' எனத் தொடங்குகின்றது. ''ஆலயங்களின் அற்புதங்கள்'' என்ற முதலாவது கட்டுரை.

பார்க்குமிடமெங்கும், நினைக்குமிடமெங்கும் நீக்கமற நிற்பவன் இறைவன். என்றும் எங்கும் எதிலும் பின்னிப் பிணைந்திருப்பவன் அவன். ஆயின் ஆலயங்களுக்குச் சென்றுதான் அவனை வணங்க வேண்டும் எனச் சொல்லப்படுவது ஏன்? என்ற கேள்வி இடைக்கிடை எழுவதுண்டு.

திருஞானசம்பந்தருக்குச் சீர்காழித் திருத்தலத்திலும், திருநாவுக்கரசருக்குத் திருவையாற்றிலும், சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் திருவெண்ணெய் நல்லூரிலும் இறைவன் காட்சி கொடுத்திருக்கின்றான். இறையருளைத் துணைக்கொண்டு நாயன்மார்கள் நிகழ்த்திய அற்புதங்களெல்லாம் ஆலயங்களிலேயே நடந்திருக்கின்றன. நாட்டிலுள்ள பல்வேறு ஆலயங்களுக்குச் சென்று இறைபுகழ் பாடி இறைவனைத் தரிசிப்பதிலேயே நாயன்மார்கள் தம் காலத்தையும் நேரத்தையும் செலவிட்டுள்ளனர். இவற்றிலிருந்து இறைவன் சிறப்பாக உறையும் இடம் ஆலயமே என்பதைத் தெளிவுபடுத்துகின்றார் அம்மையார்; ஆலயங்களின் அமைப்பும் வழிபட வேண்டிய முறைகளும் தெளிவாக்கப்பட்டுள்ளன.

இறைவனாம் முதற்பொருளைத் தலைப்பட்டுணர்ந்த பெருமக்கள் தம் உள்ளத்து ஒளியால் வெளியிடப்பட்ட

### சிற்றி

வையே தோத்திரமும் சாத்திரமுமாகும். அவர்களின் மொழிகள் இறைவனின் மொழிகளே என வெளிவந்தவை. தோத்திரங்களை இலக்கியங்களாகவும், சாத்திரங்களை இலக்கணங்களாகவும் கொள்ளலாம். தோத்திரங்கள் அனைத்தும் புகழ்ச்சி நூல்கள்; சாத்திரங்கள் புகழ்ச்சிக்குரிய பொருள் எது என நிச்சயிக்கும் நூல்கள் என்ற அடிப்படை உண்மையை விளக்கி திருமுறைகளின் சிறப்பையும்வரலாற்றையும் சிவஞானபோதம் தரும் சமய உண்மைகளையும் தத்துவங்களையும் விளக்குகின்றது இரண்டாவது கட்டுரை.

வேற்று மதங்களைச் சேர்ந்த பலர் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டுள்ளனர். இருந்தும் தமிழ் இன்றேற் சைவமில்லை; சைவமின்றேற் தமிழ் இல்லை என்று சொல்லுமளவிற்கு இவை இரண்டும் பின்னிப் பிணைந்துள்ளன.

தலைச் சங்கத் தலைமைப் புலவனாக இருந்து இயற்றமிழை வளர்த்தவன் எம்பெருமானாகியசிவபிரான் இசைவல்ல கந்தருவர்களைத் தன் செவிகளின் குண்டலங்களாக அமைத்து இசையை ரசிப்பவன் அவன்; சாமகானப் பிரியன் என்றும் அழைக்கப் படுகின்றான்.

(9ஆம் பக்கம் பார்க்க)

**நூல்: பத்துச் சொற்பொழிவுகள்**
சிவத்தமிழ்ச் செல்வி
**ஆசிரியர்: தங்கம்மா அப்பாக்குட்டி**

### நூல் நயம்

# கிரியைகளில் தனிப்பாணி வகுத்து செயற்படுத்தியவர்

யாழ்ப்பாணத்தில் பிரகாசித்துக் கொண்டுவரும் பாரம்பரியப் பெருமை மிக்க சிவாச்சாரியர்களுள் ஊரெழு சிவஸ்ரீ. பாலசுந்தரவைத்தியநாதக்குருக்கள் முதன்மை வகிப்பவர். அவர் மறைவு சைவத்திற்கும் தமிழுக்கும் ஒரு பேரிழப்பாகும்.

சமயக்கிரியைகளில் தனக்கெனத் தனிப்பாணியைக் கைக்கொண்டு வந்தவர் அவர். கிரியைகள் ஆற்ற வந்து அவர் உட்காரும் போதே சிவபெருமானின் தோற்றத்துடனும் பார்த்ததும்வணங்கும்பேறு கொண்டவராகவும் திகழ்ந்தவர். தோற்றப் பொலிவு மிக்கவர். அவர் தோற்றம் சிவபெருமானின் தோற்றத்திற்கு வேறுபட்டதல்ல,

பல ஆலயங்களில் மஹா கும்பாபிஷேகங்கள்.மஹோற்சவங்கள் நடத்திய பெருமை மிக்கவர். அன்னைத்தில் [illegible] மஹா கும்பாபிஷேகம் மஹோற்சவம் ஆகியவற்றை 30 வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்துஆற்றியிருக்கிறார்.

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவைப் பிள்ளையார், வேலணை முடிப்பிள்ளையார், இவைதவிர கீர்த்திமிக்க மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோயில் இவை எல்லாவற்றிலும் பிரதம சிவாச்சாரியாராக பணிபுரிந்திருக்கிறார். பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்தைத் தமது தகப்பனாருக்குப் பின் கிரியைகள் மூலம் செழிப்புறச் செய்த பெருமையுடையவர்.

71 வயதைத் தாண்டிய இவர் சுவிட்சர்லார்ந்து உட்படப் பிறநாடுகளிலும் கும்பாபிஷேகம் நடத்தியிருக்கிறார். சென்ற மாதம் இந்தியா சென்று திரிவேணி சங்கமத்தில் நீராடி காசி விஸ்வநாதரைத் தரிசித்து கர்மப் பிணிகளை நீக்கி வந்து சேர்ந்தார். தொடர்ந்து நயினாதீவு சென்று அங்கே அம்பிகைக்கு நடந்த கும்பாபிஷேகத்தில் சிறப்பான பங்களிப்புச் செய்தார்.

அண்மையில் தமது வீட்டில் அந்தணப்பெருமக்களை அழைத்து அவர்களுக்கு அன்னதானம் செய்தார். தொடர்ந்து சுப்பிரமணிய சாஸ்திரிகள் முதலிய பெரியோர்களை அடுத்தநாள் சென்று தரிசித்து ஆசிபெற்றார். தனது வாழ்நாள் பூர்த்தியைத் தானே அறிந்தவர் போல் அவர் செயல்கள் இடம்பெற்றன.

அன்று செவ்வாய்க்கிழமை இரவு ஒருவித சிரமமில்லாமல் சிவத்துடன் தனது ஆத்மாவை ஐக்கியப்படுத்திக் கொண்டார். அவர் விட்டுச் சென்றிருக்கும் வெற்றிடத்தை நிரப்ப யாருமிலர்.

—சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்

### நீத்தார் நயப்புரை

## இன்பத்தில் இன்பம்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

கணப்பொழுதில் மறைவது சிற்றின்பம். காலத்தால் அழியாதது பேரின்பம் என்பார் மணிவாசகர். எனவே புலன்களைப் பொறுத்தமட்டில் செவியின்பம் முதன்மையெறினும், சிற்றின்பத்திலேயே அதுவும் அடங்கும் என்பது மணிவாசகத்தின் உட்கருத்தாகும். ஆக எது அழியாத நித்தியஇன்பத்தை அள்ள அள்ளித் தருகின்றதோ அது ஒன்றே இன்பம் அதுவே உண்மையான பேரின்பம்.

ஞானமும் கல்வியும் தருவது இன்பமாகாது. ஞானம் வேறு கல்விவேறு என்பதை ஔவை மூதாட்டி வேறுபடுத்தி ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது என்று பேசுவார். கல்வி என்பது உலகறிவு. ஆனால்ஞானம்என்பது உன்னதமான தெய்வீகப்பேருணர்வைத் தருவது. இதனையே அருணகிரியாரும் ''அறிவை அறிபவர் அறியும் இன்பம்'' எனக் கூறுவார். இத்தகைய பேரின்பத்தில் திளைப்பதற்கு உவமையாக நெக்கு நெக்குருக நிமலனைக் கசிந்து பாடியவர் மணிவாசகப் பெருந்தகை. இவர் கூறும் இன்பமோ கண்டாலும், கேட்டாலும், நினைத்தாலும் நெக்குருக வைக்கும் நிலையான இன்பமான சிவானந்தம்.

இந்தஈடிணையற்ற பேரின்பத்தை நாம் எய்த வேண்டுமென்றே மணிவாசகனார் வண்டின் மீதுஏற்றி வளமான கருத்தை முன்வைக்கிறார்.

தினைத்தனையுள்ள தோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத்தேன் சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோதும்பி-

திருக்கோதும்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 3

ரெலோ அமைப்பின் முன்னாள் தலைவர் சிறிசபாரட்ணம் மற்றும் உயிர் நீத்த போராளிகளின் நினைவுக் கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில் வீதியில் நடைபெறவுள்ளது.

ரெலோ பிரமுகர்களான எம். என். சிறிகாந்தா, என். கே. சிவாஜிலிங்கம், பிரசாரச் செயலாளர் எம். கே. அபுயூசுப் ஆகியோர் கூட்டத்தில் உரையாற்றவுள்ளனர்.

(ஐ)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம் மே 3

யாழ். வண்ணை அருள்மிகுஸ்ரீ வீரமாகாளி அம்பாள்தேவஸ்தான வருடாந்த மணவாளக் கோல சங்காபிஷேகம் இன்று காலை நடைபெறும்.

பிற்பகல் 3. 30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் அதனைத் தொடர்ந்து நவசக்திஅர்ச்சனையும், திருஊஞ்சலும் நடைபெற்று அம்பாள் பூந்தண்டிகையில் திருவீதி உலாவருதலும் இடம்பெறும்.

(இ)

★ ★ ★

காரைநகர் கருங்காலி போசுட்டி முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் விசேட சமயச் சொற்பொழிவில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்றுறைப் பிரதேசசபையின் நிர்வாக அலுவலர் க, பாலசுப்பிரமணியம் ''கந்தரலங்காரம்'' என்னும்பொருளில் சொற்பொழிவாற்றுவார்.

நேற்று நடைபெற்ற முதலாம் திருவிழாவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ஆறு. திருமுருகன் 'விழிக்குத்துணை' என்ற பொருளில் சொற்பொழிவாற்றினார்.

தினமும் நண்பகல் 12. 00 மணி முதல் 1. 00 மணிவரை இடம் பெறும் இவ்விசேட சமயச் சொற்பொழிவினை காரை நகர் ஸ்ரீ சண்முகானந்த சபை ஒழுங்கு செய்துள்ளது.

(இ-7)

★ ★ ★

வில்லூன்றி விநாயகர் தேவஸ்தான சகஸ்ர சங்காபிஷேகம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11. 00 மணிக்கு நடைபெறும்.

இன்று பிற்பகல் 4. 00மணி முதல் பூர்வாங்கக் கிரியைகள், யாகபூசைகள் என்பன ஆரம்பமாகி நாளை காலையும்யாகபூசைகள்தொடர்ந்து நடைபெறும்.

(இ-9)

## சைவ சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், மே 3

அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும் சைவ சமய அறிவுப் போட்டி இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

(இ-7)

## நிரந்தர நியமனம் வழங்க கோரிக்கை

யாழ். பிராந்தியத்திலுள்ள இலங்கை வங்கி கிளைகளில் நீண்டகாலமாக கடமையாற்றும் சமயா சமய ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கொழும்பிலுள்ள வங்கி ஊழியர் சங்கத்தின் ஊடாக வங்கி தலைமை பீடத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த பத்து வருடகாலமாக இச் சமயா சமய ஊழியர்கள் நாள் சம்பள அடிப்படையில் கடமையாற்றி வருவதாகவும், இவர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் கிடைப்பதற்கு ஆவன செய்யுமாறும் இலங்கை வங்கி ஊழியர் சங்க யாழ். மாவட்ட கிளையின் செயலாளர் ரி. ஸ்கந்தராசா இது தொடர்பாக தலைமைச் சங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் கோரிக்கை விடுத்துள்ளார். (ஜ-135)

## சைவர்கள்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

நாடக, நடனக்கலைகளுக்குத் தில்லைக் கூத்தனே ஆதி பிதா— முத்தமிழுக்கும் உரியவன் சிவனே— எனக் கூறுகின்றது ''சைவமும் தமிழும்'' என்ற கட்டுரை.

தன்னைத் ''தமிழ் ஞான சம்பந்தன்'' என அறிமுகப் படுத்தியவர் திருஞானசம்பந்தர் ''தமிழோடிசை பாடல் மறந்தறியேன்'' என்றார் ''தமிழாழி'' என்ற பெயரையுமுடைய திருநாவுக்கரசர். ''தூமறை பாடும் வாயாற் சொற்றமிழ் பாடுக'' என இறைவனால் ஆணையிடப் பட்டவர் சுந்தரமூர்த்தி நாயனார் ''பாவை பாடிய வாயால் கோவை பாடுக'' என மாணிக்க வாசகரின் காதில் விழுந்த இறைவாக்கு தமிழ்வாக்கு.

கொஞ்சுந் தமிழிற் பாடினார் ஞானசம்பந்தர். கொஞ்சுந் தமிழ் பாடினார் நாவரசர்; மிஞ்சுந் தமிழ் பாடினார் சுந்தரர்; நெஞ்சை உருக்குந் தமிழ் பாடினார் மணிவாசகர் என அழகாகக் குறிப்பிடுகின்றார் அம்மையார்.

என்னை நன்றாய் இறைவன் படைத்தனன் தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே— எனத் திருமூலர் கூறியதையும் நினைவுறுத்துகின்றார்.

''குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்'' என்பர். தெய்வத்தையே குழந்தையாக்கி, அதைப் போற்றிப் புகழ்ந்து கொண்டாடுவதையும் அதன் அடிப்படைத் தத்துவத்தையும் ''விநாயக பரத்துவம்'' விளக்குகின்றது.

''முருக வழிபாடுகளுக்குள்ளே வேல் வழிபாடு தனிச் சிறப்பு வாய்ந்தது. எத்தனையோ பக்தர்கள் வேலை மாத்திரம் வைத்துப் பூசிக்கின்றனர், முருகன் கையிலுள்ள வேல் ஆராயும் நீதிவேலாகும்''. எனத் ''திருக்கைவேல் என்ற கட்டுரையில் அம்மையார் கூறுவது குறிக்கத்தக்கது.

எடுத்துக்கொண்ட பொருளை அழகாகவும் ஆழமாகவும் தெளிவாகவும் தர்க்க ரீதியாகவும் சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள் விளக்குவதை ஏனைய கட்டுரைகளிலும் காணலாம்.

சைவத்தமிழ் மக்கள் பத்திரப்படுத்தி வைத்திருந்து அடிக்கடி படித்துச் சிந்திக்க வேண்டிய நூல் ''பத்துச் சொற்பொழிவுகள்''

சொற்பொழிவுகளில் வெளியிடப்பட்ட அருமையான கருத்துக்கள் காற்றுடன் கலந்து மறைந்துவிடாமல் நூலுருவில் நிரந்தரமாக்கப்பட்டிருப்பது பாராட்டிற்குரியது.

★


ஊரெழு

சைவாலய முன்னேற்றக் கழகத்தின்

### கலைவாணி பாலர் பாடசாலை

அபிவிருத்தி நிதிக்கான

கலை நிகழ்வு

இடம்: யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கு

காலம்: 03-05-98 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2. 30 மணி (இலங்கை நேரம்)

நாடகம்

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடமாணவர்களின்

**செந்நீர் கோவணங்கள்**

மற்றும் நடன நிகழ்வுகளும் இடம்பெறும்.

பாலர் கல்விக்காக தாராளமான அன்பளிப்புக்களை எதிர்பார்க்கின்றோம்.

பிரவேசம்: 20/-, 50/-, 100/

வாழ்த்துவோர்:

PILLAIYAR TRADING COMPANY

LION AIR, JAFFNA

M. NAGARATNAM & CO

விளம்பர அன்பளிப்பு:

**சிற்றிரெக்ஸ் & ரெயிலர்ஸ்**

( ரவுசர் தினுசுகளின் சங்கமம் )

73, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(சி/3630)


# 12 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

**[சித்திரை 29 - வைகாசி 06]**



உயிர் நீத்த உடன் பிறப்புகளுக்கு

மீண்டும் எம் கண்ணீர்க் காணிக்கை

## அமரர் சிறீ சபாரத்தினம் அவர்கள்

**தாயின் விடுதலைக்காகவே தனயனும் நீ**
**ஆயிரமாயிரம் போராளிகளுடன் எம் மண்ணில்**
**பாயிரம் பாடும் களம் பல கண்டும், வென்றும்**
**நீயிறந்ததோ, நம்மவர் ஒற்றுமை குலைந்ததாலோ?**

## தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ)

[சி/3635]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிகளை தெரிவு செய்ய நடைபெறும் போட்டிகள்

வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்தில் நடைபெறவிருக்கும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றும் அணிகளைத் தெரிவு செய்வதற்கான போட்டிகளில் யாழ். கல்வி வலயம் 1, வலயம் 2 பிரிவுகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற அணிகளுக்கிடையிலான போட்டிகள் நேற்று முதல் நடைபெற்று வருகின்றன.

இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ள முதலாம் இடத்தைத் தெரிவு செய்வதற்கான மென்பந்து கிரிக்கெட் போட்டியில் யாழ். இந்து அணியை எதிர்த்து சாவகச்சேரி இந்து அணியும்—

மூன்றாம் இடத்தைத் தெரிவு செய்வதற்கான போட்டியில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியை எதிர்த்து சங்கானை சிவப்பிரகாச வித்தியாலய அணியும் மோதவுள்ளன.

இன்று மாலை நல்லூர் விக்கினேஸ்வரா மைதானத்தில் நடைபெற உள்ள கரப்பந்தாட்டப் போட்டிகளில்—

17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் ஆவரங்கால் மகாஜனா அணியை எதிர்த்து மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா அணியும்—

19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டிகளில் அச்சுவேலி மகா வித்தியாலய அணியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தா அணியும் — மோதவுள்ளன. (இ-9)

# சனத்ஜெயசூரியதிருமணம்

தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராகக் கருதப்படும் இலங்கை அணியைச் சேர்ந்த சனத்ஜெயசூரிய எயார் லங்கா விமான நிறுவனத்தில் கடைமையாற்றும் ''சுமுது கருணநாயக்க'' என்ற பெண்ணை எதிர்வரும் 8 ஆம் திகதி திருமணம் செய்ய உள்ளார்.

ஐந்து நட்சத்திரக் ஹோட்டல் ஒன்றில் நடைபெற உள்ள இந்தத் திருமணத்துக்கு நானூறு பேர் மாத்திரமே அழைக்கப்பட உள்ளனர்.

அழைக்கப்பட உள்ளவர்களில் ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், சில முக்கிய அமைச்சர்கள், சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், இலங்கை கிரிக்கெட் அணியைச் சேர்ந்த அனைத்து வீரர்கள் ஆகியோர் அடங்குவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

திருமணத்தில் இந்தியக் கிரிக்கெட் வீரர்கள் சிலரும், முன்னாள் உலக அழகு ராணி ஐஸ்வர்யாராயும் கலந்து கொள்ளுவார்கள் எனத் தெரியவருகின்றது.

சனத்-சுமுது தம்பதியினருக்கு ஏற்கனவே நல்வாழ்த்துக்கள் வந்து குவிய ஆரம்பித்துள்ளனவாம். (இ-10-9)

மனஒளி

— உளநலம் சம்பந்தப்பட்டது —

பாரம் பரியம் அதிர்ச்சி
பண்பாடு
குடும்பம் சடங்கு
நோய்

ஐந்தாவது இதழ் வெளிவந்து விட்டது!

- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
- உளநோய் சிகிச்சைப்பிரிவு
  யாழ். போதனா வைத்தியசாலை.
- சாந்திகம் 15, கச்சேரி நல்லூர் வீதி,
  சுண்டுக்குளி.

(சி/3627)

**VACANCY**

REQUIREMENTS:

1. Four passes in G. C. E. (A/L)
2. Experience in Company book keeping
3. Exposure to Computer applications
4. English typing skills
5. Age 25-40 years
6. Letters of reference from two non-related referees

If you are eligible, send your resume within 10 days of this advertisement to

EUROVILLE
866, Point Pedro Road,
Nallur, Jaffna.

(55671)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில், 3-5-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ஜே. வி. பி. யின் தலையீடு மீண்டும் அதிகரிக்கின்றது

## மேதினக் கூட்டத்தில் ஜனாதிபதி எச்சரிக்கை

கொழும்பு, மே 3

''நாட்டில் தற்சமயம் ஜே. வி.பி. யினரின் தலையீடு மீண்டும் அதிகரித்து வருகிறது. தாங்களே தொழிலாளர்களின் உண்மையான தலைவர்கள் என்ற தோரணையில் அவர்கள் பேசி வருகிறார்கள். 1987, 1988, 1989 ஆம் ஆண்டுகளில் இந்த ஜே. வி. பி. யினர் தங்களின் துப்பாக்கிகளுக்கு எத்தனை பேரை பலிகொண்டனர் என்பதை மறந்து இப்போது அவர்கள் புதிய முகத்தோடு மக்கள் மத்தியில் தமது பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். தொழிலாளர் நலன்கள் பற்றிப் பேசுவதற்கு இவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது என்பதை மக்களே திருப்பிக் கேட்க வேண்டும்.''

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கொழும்பு நகரசபை மைதானத்தில் நடந்த மேதினக் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அண்மையில் நடந்த தபால்ஊழியர் வேலை நிறுத்தத்தில் ஜே. வி. பி. யும், ஐ. தே. க. வும் பின்னணியில் இருந்துள்ளமை தெளிவாகியுள்ளது.

ஐ. தே. க. வின் மேதினக் கூட்டம் வழமையாக காலிமுகத் திடலில் நடைபெற்று வந்துள்ளது. தற்சமயம் கொழும்பில் நடத்த அவர்களுக்கு சக்தி இல்லை. அதனால் தான் கண்டிக்கும், தலவாக்கொல்லைக்கும் என்று மலைநாட்டில் நடத்துகிறார்கள்.

நம் நாட்டில் நிலவிவரும் யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு விவசாயிகள், தொழிலாளர்கள் ஏனைய பொதுமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

யுத்தத்தின் காரணமாக நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கொல்லப்படுகின்றனர். அப்படி இறப்போர் அரசியல்வாதிகளின் பிள்ளைகளோ, உயர்ந்த பதவிகளில் உள்ளவர்களின் பிள்ளைகளோ அல்ல. சாதாரண தொழிலாளர்களின் பிள்ளைகளே—என்றார். (இ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக பிரிவு கழகங்களுக்கு இடையேயான தடகள விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெறும்.

பிரதமவிருந்தினராக மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக திட்டப்பணிப்பாளர் செ. மகாலிங்கம் சண்டிலிப்பாய் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெ. இருதயநாதன், மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் கு. சண்முகநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர். (இ-90)

## கொடிகாமத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இறந்தவர் ஆவார்.

இவரது சடலம் கொடிகாமம் பொலீஸாரினால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

காயமடைந்தோர் விவரம் வருமாறு:

★ கா. வேலாயுதம் (வயது 47) வரணி வடக்கு.

★ சி. செல்வரத்தினம் (வயது 50) குடமியன், வரணி

★ க. செல்வவிநாயகம் (வயது 35)குடமியன், வரணி

★ க. குணச்செல்வம் (46 வயது) பருத்தித்துறை வீதி, கொடிகாமம்

★ சி. கிருஸ்ணபவானி (வயது 19)

★ இ. குணரத்தினம் (வயது 40) கொடிகாமம்.

★ சி. கந்தையா (வயது 70) மந்துவில் வடக்கு.

★ சிற்றம்பலம் (வயது 57) குடமியன், வரணி.

★ த. தினேஸ் (வயது 12) குடமியன், வரணி.

★ ஐ. ஜெயநந்தினி (வயது 12 ) குடமியன் வரணி.

இச்சம்பவத்தின் போது அங்கு நின்ற படையினரிலும் மூவர் காயம் அடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அதனை ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை.

ஏப்பிரல் 12 ஆம் திகதியும் இதே போன்ற ஒரு கினேட் வெடிப்புச் சம்பவம் யாழ். நகரப் பகுதியில் இடம்பெற்றது தெரிந்ததே.

அச்சம்பவத்துக்குக் காரணமானோர் குறித்தும் தகவல் எதுவும் வெளியாகி இருக்கவில்லை. (இ-150-3-117)

# நவாலி இளைஞர் சுவிஸில் மரணம்

## கத்திக்குத்துக் காயத்துடன் சடலம்

நவாலி, மே 3

நவாலியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சுவிட்சர்லாந்தில் கத்திக் குத்துக்கு இலக்காகி மரணமடைந்துள்ளார்என அவரது பெற்றோருக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது—

நவாலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தபேஸ்வரன் (வயது 19) சுவிட்சர்லாந்திலுள்ள பொலீஸ் நிலையம் ஒன்றில் கடமையாற்றி வந்துள்ளார். கடந்த டிசம்பர் மாதம் 25 ஆம் திகதி முதல் அவரைக் காணவில்லை என நவாலியிலுள்ள அவரது பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

சுவிட்சர்லாந்தில் பொலீஸாரும் சம்பந்தப்பட்டவரின் உறவினர்களும் அவரைத் தேடி வந்தனர். ஆனால் கடந்த மாதம் ஒன்பதாம் திகதி ஒதுக்குப் புறமான இடம் ஒன்றில் கத்திக் குத்துக்கு இலக்காகி இறந்த அவரது உடல் கிடக்கக் காணப்பட்டதாகவும்—

அவருக்கு அருகில் அவரது அடையாள அட்டையும் வைக்கப்பட்டிருந்ததாகவும்—

பொலீஸார் இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை நடத்தி வருவதாகவும்—செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் அவரது பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-100-9)

# ஐ. நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி இன்று வருகிறார்

இலங்கையில் ஏற்பட்டுள்ள யுத்தம், குழந்தைகள் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் பற்றி ஆய்வு செய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் விசேஷ பிரதிநிதி ஒலாரா ஒட்டுனை இன்று இலங்கைக்கு வர உள்ளார்.

இன்று இலங்கை வரும் அவர் இங்கு தங்கியிருக்கும் காலத்தில் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிரேஷ்ட அரசாங்க, இராணுவ அதிகாரிகள், அரசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோரையும் சந்திக்க உள்ளார்.

அத்துடன் அவர் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கும் சென்று இடம்பெயர்ந்துள்ளோர், மீளக்குடியமர்ந்துள்ளோர், எல்லைக் கிராமங்களில் தங்கியுள்ளோர் ஆகியோரையும் சந்தித்து அவர்களின் நிலைமைகளையும் கண்டறிவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-9)

## ஈழத் தமிழரின்...

(முதலாம் பக்கத்தொடர்)

நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

★ சர்வதேச மத்தியஸ்தத்துக்கு அனுமதிக்கப்படல் வேண்டும்.

★ தமிழர்களின் பகுதிக்கு சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச தொடர்புச் சாதனங்கள், சர்வதேச அமைப்புக்கள் நேரடியாகச் செல்ல அனுமதித்தல் வேண்டும். (7)

## படக்காட்சி...

(முதலாம் பக்கத் தொடர்)

வில்லை என்றும்—

இன்று காண்பிக்கக் கூடியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-9)

# அறநெறி பாடசாலை

தென்மராட்சி, மே 3

பளைப் பிரதேசத்தில் அறநெறிப் பாடசாலை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப் பாடசாலை இத்தாவில் முருகமூர்த்தி ஆலயத்திற்கு அருகில் உள்ள கட்டடத்தில் இயங்குமென பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி தெரிவித்தார். (ஐ-117)

## பாலியல்...

(முதலாம் பக்கத் தொடர்)

மேரி இராஜரத்தினம் என்ற இச் சிறுமி கடந்த திங்கட்கிழமை முதல் காணாமற் போயிருந்தார்.

கடந்த புதன்கிழமை இவரின் சடலம் செட்டிகுளம் பகுதியில் உள்ள பாழடைந்த கிணறு ஒன்றில் இருந்து மீட்கப்பட்டது.

அந்தச் சிறுமியின் உடலைப் பரிசோதனை செய்த டாக்டர் சிறுமி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் மூச்சுத் திணறி மரணமானார் எனத் தெரிவித்தார்.

சிறுமி காணாமற்போன அன்று சிறுமியை ஏற்றிச் சென்ற ஒருவர் இச்செயலைச் செய்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

பொலீஸார் அந்த நபரைக் கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (இ-164-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org